Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038

(சி/2485)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 02 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 28 (17.07.2004) சனிக்கிழமை இதழ்:288

# போர்க் கப்பலை வழங்கியதன் மூலம்

# இலங்கையை யுத்தத்தில் ஈடுபட

# அமெரிக்க அரசு தூண்டுகின்றது!

## தூதரக அதிகாரியிடம் கூட்டமைப்பு எம்.பிக்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

**இலங்கைக்கு யுத்தக் கப்பல் வழங்கியதன் ஊடாக அரசாங்கத்தை யுத்த நடவடிக்கையில் ஈடுபட அமெரிக்கா தூண்டுகிறது என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்கத் தூதரக அரசியல் அலுவலரான கோடி சி ரெயிலரிடம் தெரிவித்தனர்.**

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுப் பிற்பகல் தங்களது அலுவலகத்தில் வைத்து கோடி சி ரெயிலரைச் சந்தித்தபோதே இந்தக் கண்டனத்தைத் தெரிவித்தனர். இதுகுறித்து அமெரிக்கத் தூதரக அதிகாரியிடம் மேலும் அவர்கள் தெரிவித்ததாவது –**

இலங்கை அரசாங்கம் சமாதான முயற்சிகளைக் கைவிட்டு, போருக்கான முன்னாயத்த நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வருகின்றது. அதனை ஊக்குவிக்கும் வகையிலேயே சர்வதேச நாடுகள் பல ஆயுதங்களை வழங்கி உதவிவருகின்றன. இது எமக்கு கவலையளிக்கின்றது.

அதிலும், அமெரிக்கா அண்மையில் யுத்தக் கப்பலொன்றை கடற்படைக்கு வழங்கியிருப்பதன் மூலம் அரசுக்கு போர் ஆற்றலை வழங்கி அதனூடாக யுத்தத்தை நடத்த ஊக்குவிக்கின்றது.

இத்தகைய செயல்களை அமெரிக்கா உடன் கைவிடவேண்டும்.

யுத்தக் கப்பலை வழங்கிய அமெரிக்க கடற்படை அதிகாரி -

இலங்கை படை மிகவும் வலிமையுடன் விளங்கவேண்டும். ஆனால், யுத்தம் செய்யக்கூடாது எனக் கூறியமையானது - யுத்தத்தை தொடருமாறு கூறுவதற்கு ஒப்பானது.

இது எமக்கு மிகவும் மன வேதனையளிக்கின்றது. இதனை நாங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் துப்பாக்கிச் சூடு இரண்டு பேர் உயிரிழப்பு!

(திருகோணமலை)

திருகோணமலை - மூதூர் சாபி நகரில் நேற்றிரவு இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டதுடன் ஒருவர் காணாமற்போயுளளார்.

நேற்றிரவு 8.50 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

மூதூர் எல்லைப் பகுதிக்கு மாடு வாங்குவதற்குச் சென்ற முஸ்லிம்கள் மூவர் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே சாபி நகரைச் சேர்ந்த சி. சாதிக் என்பவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த சாபி நகரைச் சேர்ந்த பாகிம் என்பவர் மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இவர்களுடன் கூடச்சென்ற மற்றவர் காணாமற்போயுள்ளார். இவர் தொடர்பான விவரம் நேற்றிரவு தெரியவரவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக மூதூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(04)

## தொண்டையில் சிக்கிய மீன்முள்ளு பெண்ணின் உயிரைப் பறித்தது!

(யாழ்ப்பாணம்)

மீன்முள்ளு தொண்டையில் சிக்கியதன் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இளவாலையைச் சேர்ந்த 42 வயதான தே.மரியஸ்ரலா என்பவரே மரணமடைந்தவராவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

வீட்டில் உணவு அருந்திக் கொண்டிருந்த வேளையில் மீன் முள்ளு தொண்டையில் சிக்கியதன் காரணமாக இப்பெண் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். ஆயினும் சிகிச்சை பலனளிக்காமல் நேற்று முன்தினம் இவர் மரணமடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சச்சு மாஸ்டரின் துப்பாக்கி மூலமே அவரை நான் சுட்டுக் கொன்றேன்!

### சுட்டவர் பொலிஸாருக்கு வாக்குமூலம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சச்சு மாஸ்டருக்கு கைத்துப்பாக்கி, கைக குண்டுகள் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பன ஒரு மாதத்திற்கு முன்னரே தபாலில் வந்ததாக-

சச்சு மாஸ்டரைச் சுட்டுக்கொன்ற சக கைதியான புவிதரன், பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

கருணாவின் நெருங்கிய சகாவான சச்சு மாஸ்டரின் துப்பாக்கியைப் பயன்படுத்தியே அவரைத்தான் சுட்டுக்கொன்றதாகவும் -

பார்சலில் வந்த துப்பாக்கியை வைத்திருக்குமாறு சச்சு மாஸ்டர் தனனிடம் தந்ததாகவும் புவிதரன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கைத்துப்பாக்கி தொடர்பாக தனக்கும்- சச்சு மாஸ்டருக்குமே தெரிந்திருந்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

திருகோணமலையில் நகை ஒன்றைக் களவாடிய குற்றத்திற்காக இரண்டு வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கைதியே புவிதரன் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - மட்டக்களப்பு சிறைச்சாலையில் நேற்று முன்தினம், சச்சு மாஸ்டர் மற்றும் ஜெயககுமார் ஆகியோரைச் சுட்டுக்கொன்ற புவிதரன் என்ற இளைஞரை தொடர்ந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க கடும் நடவடிக்கை எடுங்கள்

### மட்டு. படையினருக்கு ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவு

மட்டக்களப்பில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு படையினருக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் படுகொலை அச்சுறுத்தல்களையடுத்து நிலைமைகளை வழமைக்குக் கொண்டுவருவது தொடர்பாக ஆராய்வதற்காக மட்டக்களப்புக்குச் சென்றிருந்த சமாதானத்தை ஒருங்கிணைக்கும் செயலகத்தின் இணைப்பாளர் ஜயந்த தனபால இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

நேற்று மட்டக்களப்புக்குச் சென்று அங்கு படையதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினோம். இந்தச் சந்திப்பின்போது யுத்தநிறுத்த உடன்படிக்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் குறித்து ஆராய்ந்தோம்.

இதன்பின்னர் மட்டக்களப்பு இராமகிருஷ்ணன் மடத்துக்குச் சென்று மாவட்டத்தின் நிலைமைகள் குறித்து ஆராய்ந்தோம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் யுத்தநிறுத்தமீறல் சம்பவங்கள் குறித்து, அங்குள்ள மக்கள் கவலை அடைந்துள்ளனர். கொலைச் சம்பவங்கள், அச்சுறுத்தல் சம்பவங்கள் குறித்து எவர் மீதும் குற்றஞ்சுமத்தவில்லை. எனினும் இவர்களிடையே அமைதியின்மை இருந்தமை உணரமுடிந்தது.

இத்தகைய சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்காக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார் எனவும் ஜெயந்த தனபால தெரிவித்தார்.

## விரைவில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் என்கிறார் கதிர்காமர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் மிகவிரைவில் மீண்டும் ஆரம்பமாகுமென வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் இங்கிலாந்தின் அரச பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார்.

இங்கிலாந்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் கடந்த வியாழக்கிழமை இங்கிலாந்தின் சர்வதேச விவகாரங்களுக்கான அரச பிரதிநிதிகள் இருவருடனான வெவ்வேறு சந்திப்புக்களின்போதே, இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இங்கிலாந்து நாடாளுமன்ற அமைச்சர்களுடனான தனது சந்திப்பின்போது - லக்ஸ்மன் கதிர்காமர் கிழக்கு மாகாணத்தின் இன்றைய நிலை குறித்துக் கூறினார்.

நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கு இங்கிலாந்து அரசு வழங்கியுள்ள 18 மில்லியன் பவுன்ஸ் உதவியமைக்கும் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

சமாதானம் நோக்கிய பாதையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுதியான நிலைப்பாட்டில் உள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR
Your friend in the skies...

# 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை ஒகஸ்ட் 22 இல் நடத்தக் கோரிக்கை!

## சைவ பரிபாலனசபை விடுத்தது

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை ஆடி அமாவாசை தினத்தில் நடத்துவதை நிறுத்தி அதற்கு அடுத்த வாரமான ஒகஸ்ட் 22 ஆம் திகதி நடத்துமாறு யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை, பரீட்சை ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கை குறித்து பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மிக நீண்டகாலமாக ஆடி, ஆவணி மாதங்களில் நடைபெற்று வருகின்றது. இந்தப் பரீட்சையால் நாட்டில் உள்ள அனைத்து 10 வயது மாணவர்களும் இன, மத, மொழிக்கு அப்பால் நன்மை பெற்றுவருகின்றனர். இந்தப் பரீட்சையை அடுத்த மாதம் 15 ஆம் திகதி நடத்தவுள்ளதாக பரீட்சை ஆணையகம் அறிவித்துள்ளது.

ஆடி அமாவாசை சைவ மதத்தவர்களுக்கு மிகப் புனிதமான ஒரு நாள். இறந்த தந்தையை நினைத்து பிதிர்க்கடன் செய்யும் தினமாகும். புலமைப்பரிசில் பரீட்சை மேற்பார்வையாளர்களாகப் பணியாற்றும் பெருந்தொகையான சைவசமய ஆசிரியர்களும், அதிகாரிகளும் தந்தையை இழந்தவர்களாக இருக்கலாம். அதே போன்று பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிலும் தந்தையை இழந்த சைவ மாணவர்கள் இருக்கலாம்.

இவர்கள் பிதிர்க்கடன் நிறைவு செய்து விரதம் அனுஷ்டிப்பதற்கு வசதியாக இப்பரீட்சையை ஒகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி ஞாயிற்றுகிழமைக்குப் பின்போடுமாறு கேட்டுக்கொள்கின்றோமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## வரலாறு காணாத மலிவு விற்பனை

கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

காலம் : 2004 ஜூலை 19 முதல் 29 வரை
நேரம் : தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)
இடம் : யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்.

- சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
- பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
- மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகளை (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்ப கல்லூரிகள், கல்வியியல் கல்லூரி, பொதுநிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படும்.

(சி-2764) தொடர்புகளுக்கு: வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்.



# நல்லூர் பிரதேசசபை

## வேலைகளிற்கான கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேசசபையினால் (ICTAD) தரம் M-9 பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்விவைப்புப் பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 19.07.2004 திகதி தொடக்கம் 29.07.2004 திகதி பி.ப.3.00 மணிவரை.
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி : 30.07.2004. ந.ப.12.00 மணி வரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி : 30.07.2004 பி.ப. 2.00 மணி. (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமூகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
05. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை செயலாளர், நல்லூர் பிரதேசசபைக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
06. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விபரம் | மீளளிக்கப்படும்கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படாத வற்வரி |
|---|---|---|---|---|
| 01. | கோவில் வீதி 1ம், 2ம் வீதி கல்லிட்டுத்தாரிடல். | 2650.00 | 500.00 | 75.00 |
| 02. | சி.சி.த.கலவன் பாடசாலை வீதி, கல்லிட்டுத்தாரிடல். | 4700.00 | 500.00 | 75.00 |
| 03. | சைவப் பாடசாலை வீதி, 1ம் குறுக்கு வீதி கல்லிட்டுத்தாரிடல். | 2050.00 | 500.00 | 75.00 |
| 04. | செல்வநாயகம் வீதி கல்லிட்டுத் தாரிடல். | 2450.00 | 500.00 | 75.00 |
| 05. | நேதாஜி வீதி கல்லிட்டுத்தாரிடல் | 4750.00 | 500.00 | 75.00 |
| 06. | நாமகள் வீதி கல்லிட்டுத்தாரிடல். | 3400.00 | 500.00 | 75.00 |
| 07. | பரவக்குளம் வீதி கல்லிட்டுத்தாரிடல். | 3250.00 | 500.00 | 75.00 |
| 08. | கேணியடி வீதி கல்லிட்டுத்தாரிடல். | 2400.00 | 500.00 | 75.00 |
| 09. | கொக்குவில் குறுக்கு வீதி கல்லிட்டுத்தாரிடல். (ஊனமுற்றோர் புனர் வாழ்வுக்கழக வீதி) | 1250.00 | 500.00 | 75.00 |
| 10. | பெட்டி மதகு அமைத்தலும், கேற் வேலையும் - கொக்குவில் சந்தை. | 3700.00 | 500.00 | 75.00 |
| 11. | செபஸ்தியார் வீதி 2ம் முறை தாரிடல். | 1500.00 | 500.00 | 75.00 |

### கூறுவிலை கோரல்

EPSON - LQ2180 - PRINTER - A3 Size

குறிப்பிட்ட PRINTER வழங்க விரும்புவோர் அதற்கான கூறுவிலையை சுயமாகத் தயாரிக்கப்பட்ட தங்களது நிறுவன கடிதத்தலைப்பில் 30.07.2004, 12.00 மணிக்கு முன் கிடைக்கத்தக்கதாக எமக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தலைமை அலுவலகம்,
நல்லூர் பிரதேசசபை,
16.07.2004

(சி-2767)

பொன்னையா வைரமுத்து,
செயலாளர்.


### உள்ளூராட்சி வார கட்டுரைப்போட்டி

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி இன்று காலை 9.00 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே வழங்கப்பட்ட தலைப்புகளில் விரும்பியதொரு தலைப்பின் கீழ் கட்டுரை எழுத வேண்டும். ஏற்கனவே விண்ணப்பங்களை சமர்ப்பித்த மாணவர்கள் பாடசாலை அதிபரிடமிருந்து சுட்டெண்ணை தெரிந்து கொள்ளவும். உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வின்போது வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கப்படும். (100)

### விளையாட்டுப் போட்டி

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி கட்சன் வீதியில் அமைந்துள்ள சூசையப்பர் முன்பள்ளிச் சிறுவர்களின் திறனாய்வுப்போட்டி கடந்த 12 ஆம் திகதி இனிதே இடம் பெற்றது.





கலைக்கவி நீ.எஸ்த்தாக்கி அதிபரின் 20 ஆவது நினைவு விழா நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அரங்கில் நேற்று நடை பெற்றபோது பிரதம விருந்தினர் கலாநிதி நீ.மரியசேவியர் மங்கள விளக்கேற்றுவதையும், உதவிப் பங்குத் தந்தை கலைக்கவியின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிப்பதையும் காணலாம்.

# உயர் பாதுகாப்பு வலய விவசாயிகளுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள விவசாயிகளுடனான கலந்துரையாடல் நாளை காலை 9.00 மணிக்கு கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

மறவன்புலவு தனங்கிளப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளே இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்திற்கு தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், யாழ்.மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்துவது குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (29)


நிறைஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், ரஞ்சிதா, அனிதா நடித்த
ஜெய்ஹிந்த்
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00 (பு.நே.)
THE GURU வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே) (சி-2723)

The Royal College of Jaffna
ஆங்கிலம் படிக்கின்றீர்களா, புத்திசாலியாகவும் இருக்கின்றீர்கள். ஆனால் கதைக்க முடியவில்லையா? கவலை வேண்டாம்.
Spoken English By :
விக்கினேஸ்வரன் ஆச்சாரி :
426, (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம்,
பிளாக் வீதி, சங்கானை. (சி-2734)

நாகம்ஸ் சுன்னாகம்
சில தினங்களுக்கு மட்டும்
அர்ஜுன், அபிராமி, பிரகாஷ்ராஜ் நடித்த





தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார், சுஜாதா, வடிவேலு நடித்த





காட்சிநேரம்:-10.30, 2.306.30, 9.3 (பு.நே)
மானஸ்தன்
(சி-2725)



அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காவை - யாழ்.படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலா கைலாகு கொடுத்து வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்; விசாரணை நடத்துமாறு கோரிக்கை!

(கொழும்பு)

ஐந்து ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக, விசாரணை நடத்தப்படவேண்டுமென சுதந்திர ஊடக நிலையம் பொலிஸ்மா அதிபரைக் கோரியுள்ளது.

கடந்த புதன்கிழமை இந்த ஐந்து பத்திரிகையாளர்களும் இரு வேறு இடங்களில் செய்திகளைச் சேகரித்துக் கொண்டிருந்த வேளையிலேயே தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் முதலாவது - சம்பவம் கொஸ்கொட பொலிஸ் பிரிவில் இடம்பெற்றது. நான்கு ஊடகவியலாளர்கள் இந்தப் பகுதியில் மரணம் தொடர்பாக செய்திகளைச் சேகரித்துக் கொண்டிருந்தவேளை, அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால், அவர்கள் வைத்திருந்த கமரா மற்றும் உபகரணங்கள் சேதமடைந்தன.

அடுத்த தாக்குதல் - அதே தினத்தில் வத்தளைப் பொலிஸ் பிரிவில் இடம்பெற்றது. இங்கு சூதாட்டத்திற்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டத்தைப் படம்பிடிக்கவும், செய்தி சேகரிக்கவும் சென்ற பெண் செய்தியாளரின் மூன்று சக்கர வாகனம் தாக்கப்பட்டதில் அது சேதமடைந்ததுடன், அவரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டார்.

அனுர ஜலன்ட் (ஜலண்ட்) ஜனித் டி சில்வா (ஐ.ரி.என்) சுஜீவா பிரியதர்சனா (சுவர்ணவாகினி) எஸ்.சு. வை.டி.சில்வா (லங்காதீப) யாமுனி றஸ்மிக (லங்கா நியூஸ் பேப்பர்) ஆகிய ஊடகவியலாளர்களே தாக்குதலுக்குட்பட்டவர்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

# பதிவு வைத்தியர்கள் வேலைநிறுத்தம் வைத்தியசாலைப் பணிகள் பாதிப்பு!

பதிவு செய்யப்பட்ட அரசாங்க வைத்தியர்கள், உதவி வைத்தியர்கள் நேற்று முன்தினம் காலை முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சம்பள முரண்பாட்டினை நீக்குவது தொடர்பாக அரசாங்கம் மௌனம் சாதித்து வருவதே இந்தப் போராட்டத்துக்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

சுகாதார வைத்திய சேவையிலுள்ள சம்பள முரண்பாட்டை நீக்குவது குறித்து, சுகாதார அமைச்சர் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி பட்டியல் ஒன்றை வெளியிட்டதாகவும், பின்னர் பெப்ரவரி 4 ஆம் திகதி வெளியிட்ட பட்டியலின்படி பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள் மற்றும் உதவி வைத்தியர்களுக்குச் சம்பள முரண்பாடு காணப்படுவதாகவும், பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள் உதவி வைத்தியர்கள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் தமது சங்கத்தைச் சேர்ந்த 1500 பேர் குதித்துள்ளதாக அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர், வைத்தியர் மகிந்த லியனகே தெரித்தார்.

மாவட்ட வைத்தியசாலை, ஆதாரவைத்தியசாலை, கிராமிய வைத்தியசாலை, மத்திய மருந்தகங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிப் புறக்கணிப்பால் சிகிச்சை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களது பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து தீர்வொன்றைப் பெற்றுத்தருமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ திஸ்ஸ தெய்வேந்திர சம்பள ஆணைக்குழுவைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - இந்த வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தால் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு அரச பட்டதாரி வைத்தியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# மதப்பிரிவினையை எதிர்த்து; மன்னாரில் கண்டனப் பேரணி!

அண்மைக்காலமாக மன்னார் மாவட்டத்தில் மதங்களிடையே பிரிவினையைத் தோற்றுவிக்கும் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று முன்தினம் கண்டனப் பேரணியொன்று நடத்தப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் கிறிஸ்தவ சமயத்தவர்களுக்கும், இந்து சமயத்தவர்களுக்கும் இடையே பிரிவினைகளைத் தோற்றுவிக்கும் நோக்கில் உண்மைக்குப் புறம்பான துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டு வந்தன.

கத்தோலிக்கத் திருச்சபைக்கு எதிராக - உண்மைக்குப் புறம்பான செய்திகள் வெளியிடப்பட்டு வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடாத்தப்பட்ட இந்த ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இத்தகைய போலித்துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்படுவதற்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கக் கோரி மன்னார் அரச அதிபர் வி.விஸ்வலிங்கத்திடம் ஊர்வலத்தின் இறுதியில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதேவேளை - மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித்திட்டங்கள் தாமதமடைந்துவருகின்றமையைச் சுட்டிக்காட்டியும், அதற்கான தடைகளை அகற்றி, அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரித கதியில் மேற்கொள்ளுமாறு மற்றுமொரு மகஜர் மன்னார் மாவட்ட அதிபரிடம் ஊர்வலத்தில் கலந்துகொண்டோரால் கையளிக்கப்பட்டது.

# தமிழகத்திருந்து வந்த குடும்பங்கள் மன்னாரில் மீளக் குடியேறியுள்ளன

அரசாங்கத்துக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் நிலவும் அமைதிச் சூழலையடுத்து, இந்தியாவில் தங்கியிருந்த இலங்கை அகதிகளில் 750 குடும்பங்கள் மீளவும் மன்னாரில் குடியேறியுள்ளனர்.

இவர்களில் மன்னார் பிரதேச செயலகத்திலுள்ள பேசாலை வடக்கு, தெற்கு மற்றும் தலைமன்னார் பிரதேசங்களிலும் 600 குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளன.

இவற்றைவிட, நானாட்டான் பிரதேச செயலகத்திலுள்ள வங்காலை, முருங்கன் பகுதியில் 125 குடும்பங்களும், மற்றைய பிரிவுகளில் மிகுதிக் குடும்பங்களும் மீளக்குடியேறியுள்ளன.

இவ்வாறு குடியேறிய குடும்பங்களில் ஐம்பது வீதமானவர்களுக்கு மீள்குடியமர்வு கொடுப்பனவாக இருபத்தையாயிரம் ரூபாவினை நிகொட் நிறுவனம் வழங்கியுள்ளது.

இதனைவிட யு.என்.எச்.சி.ஆர், வாழ்வோதயம் மற்றும் கிராம அபிவிருத்தி நிறுவனம் என்பனவும் இந்தக் குடும்பங்களுக்கு சில அடிப்படை உதவிகளை வழங்கியுள்ளன. (201)

## மட்டக்களப்பு சம்பவம்; விசாரணைக்கு உத்தரவு!

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறு நீதி அமைச்சர் ஜோன் செனவிரத்ன சிறைச்சாலை ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை. இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடாத்துவதற்காக சிறைச்சாலைத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் மட்டக்களப்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். குறிப்பிட்ட சம்பவத்துடன் சிறைசசாலை அதிகாரிகளுக்கும் தொடர்பு இருந்தால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சிறைச்சாலைத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# ஐ.நா.செயலர் பதவிக்கு போட்டியிடும் ரிரோன் பெர்னாண்டோவை இலங்கை ஆதரிக்கவில்லை

## வெளியுறவு அமைச்சு கடிதம்

(கொழும்பு)

ஐ.நா.செயலர் பதவிக்குப் போட்டியிடுவதற்கு, முன்னாள் வெளியுறவு அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோவைத்தாம் ஆதரிக்கவில்லையென, இலங்கையின் வெளியுறவு அமைச்சு வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஐ.நா.செயலர் பதவிக்கு ஆசிய நாட்டவர் ஒருவர் வருவதை விரும்புவதாகத் தெரிவித்துள்ள இந்தக் கடிதம், யாரை இலங்கை அரசாங்கம் ஆதரிக்குமென்பதனைத் தெரியப்படுத்தவில்லையெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஐக்கியதேசிய முன்னணி அரசின் காலத்தில் வெளியுறவு அமைச்சராக இருந்த ரிரோன் பெர்னாண்டோ ஐ.நா.செயலர் பதவிக்கு, தான் போட்டியிடுவதற்கு சில நாடுகளின் ஆதரவையும் பெற்றிருந்தார்.

ஆனால், இவரின் இந்த நடவடிக்கையில் மில்லியன் கணக்கான ரூபாய்களைச் செலவிடுகின்றார் என ஊடகங்கள் இவரை மிகக்கடுமையாக விமர்சித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியா செல்லவுள்ளார்!

இந்தியாவிற்குச் செல்லவுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அந்நாட்டு அதிகாரிகளுடன் பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகப் பிரதமரின் பேச்சாளர் வெலிவத்த கடந்த வியாழன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மூன்றுநாள் விஜயமாக இந்தியா செல்லவுள்ளார். இவ்வாறு செல்லும் பிரதமர், இந்தியத் தலைவர்களுடன் இருநாடுகளுக்கிடையிலான அபிவிருத்தி, பொருளாதாரம் மற்றும் சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் தொடர்பாகக் கலந்துரையாடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, பிரதமர் ராஜபக்ஷ எப்பொழுது இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார் என்ற விபரத்தை வெலிவத்த வெளியிடவில்லை.

# நாடாளுமன்ற பொதுமக்கள் கலரி மறு அறிவித்தல் வரை மூடப்படும்

## நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பிரியாணி விஜேசேகர

(கொழும்பு)

நாடாளுமன்றத்தின் பொதுமக்கள் கலரி (உட்காரும் இடம்) திகதி குறிப்பிடாமல் மூடப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறும் நாடாளுமன்றத்தின் கூட்டத்திலிருந்து மீண்டும் அறிவிக்கும் வரை பொதுமக்கள் கலரி திறந்திருக்காது என நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் திருமதி பிரியாணி விஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் எதிர்வரும் நடவடிக்கைகள் தொடர்பாக சபாநாயகர் டபிள்யூ ஜே.எம்.லொக்குபண்டார நாடாளுமன்றத்தின் மூத்த அதிகாரிகளோடு நடத்திய கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நாடாளுமன்றக்கூட்டம் நடைபெறும் தன்மைக்கு அமையப் பொதுமக்கள் கலரி மீண்டும் திறப்பது பற்றித் தீர்மானம் எடுப்பதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

20 ஆம் திகதி கூட்டத்தின் போது - பொதுமக்கள் கலரி மூடப்பட்டிருந்தாலும், அன்றைய தினம் பதவிப்பிரமாணம் செய்வதற்கு முடிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களது உறவினர்கள் மாத்திரம் பொதுமக்கள் கலரிக்கு அழைத்துச் செல்லப்படுவதற்கு அனுமதி வழங்கப்படும் என நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.(தே)

# கருணாவின் மனைவியின் பெயரில் பல நிறுவனங்கள் இயங்குகின்றன!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா விடுதலைப்புலிகள் அமைப்பில் செயற்பட்ட காலத்தில் கோடிக்கணக்கில் பணத்தை சூறையாடி தனது மனைவியின் பெயரில் தனியார் வங்கியில் வைப்பிலிட்டிருப்பதுடன் ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்களையும் நடத்திவருவது அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான விடயங்களை கொழும்பிலிருந்து வெளிவரும் டெய்லிமிரர் ஆங்கிலப் பத்திரிகை வெளியிட்டுள்ளது. தராகி என்பவரால் எழுதப்பட்டுள்ள செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழீழ விடுதலைப்புலிகளால் கடந்த மார்ச் மாதம் வெளியேற்றப்பட்ட பின்பு மகாஜல எனும் பெயரில் ஏற்றுமதி இறக்குமதி தனியார் நிறுவனம் ஒன்றை கருணா பதிவு செய்துள்ளார்.

நிறுவனத்தின் தலைவராக கருணாவின் மனைவி நிரா என்றழைக்கப்படும் வித்தியாபதியும், முகாமைத்துவப் பணிப்பாளராக கருணாவின் மனைவியின் தந்தையார் கல்லடியைச் சேர்ந்த கந்தையா சந்திரசேகரன் பெயரிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மகாஜல ஏற்றுமதி இறக்குமதி நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழ் இலக்கம் பீ.வி.எஸ். 36846 ஆகும். இது நிறுவனங்கள் பதிவாளர் நாயகம் இந்நிறுவனத்திற்கான உடன்படிக்கை ஆவணங்கள், உப விதிகள் என்பன சட்டத்தரணியும் சத்திய ஆணையாளருமான எஸ். துரைராசாவால் அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்திற்கு வெள்ளவத்தையிலுள்ள தனியார் வங்கி ஒன்றில் 25 மில்லியன் ரூபா கருணாவின் மனைவியின் பெயரில் வைப்பிலிடப்பட்டு இதனை ஆதாரமாகக் காட்டி நிறுவனத்தை பதிவு செய்துள்ளதாகவும் அந்தச் செய்திக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மேலும் இரு நிறுவனங்கள் கருணாவின் பெயரில் பதியப்பட்டுள்ளதான விடயமும் அம்பலத்துக்கு வந்துள்ளன.

இரு நிறுவனங்களுக்கும் கருணாவின் நெருங்கிய சகாவாகவிருந்து செயற்பட்டு வரும் குகனேசன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கணக்காளர், கணக்கு பரிசோதகர்களின் கூற்றுப்படி 30 மில்லியன் ரூபாய்களுக்கு மேல் உள்ளூர் நிறுவனங்கள், வர்த்தகர்கள் மற்றும் தனவந்தர்களிடமிருந்து குகனேசன் ஊடாக அறவிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பெரும்தொகை நிதி பெற்றுள்ளமை தொடர்பான வரவு செலவு ஆவணங்கள் எதுவும் இல்லை என விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு பொதுமக்களின் பணத்தை சூறையாடி கருணா நிறுவனங்களை உருவாக்கியுள்ள அதேவேளை - கருணாவின் வரிவசூலில் மட்டு. அம்பாறை மாவட்டங்களில் அதிகளவு விவசாயிகள், வர்த்தகர்கள், தனவந்தர்கள் பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆசிய கிண்ணக் கிரிக்கெட்

# பங்களாதேஷ் 116 ஓட்டங்களால் ஹொங்கொங்கை தோற்கடித்தது



(கொழும்பு)

ஆறு நாடுகள் பங்குபற்றும் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டி நேற்று கொழும்பில் ஆரம்பமானது. இதில் பங்களாதேஷ் - ஹொங்கொங் அணிகளுக்கு இடையில் கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடந்த முதலாவது போட்டியில் பங்களாதேஷ் 116 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற ஹொங்கொங் அணித்தலைவர் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். இதனால் பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்படி இந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றது.

இவ்வணி சார்பாக ஜாவிட் ஓமர் 68, ஹபிபுல் பஷார் 32, காலித் மசூத் 26, காலித் ம.ஃமூட் 22 ஆகியோர் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் இலியாஸ் குல் 3, அப்சால் ஹைடர், காலித் கான், நஜீப் அமர், பிரெஞ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹொங்கொங் அணி 45.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 105 ஓட்டங்கைள மட்டுமே பெற்றதால் பங்களாதேஷ் 116 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

ஹொங்கொங் அணி சார்பில் தபாநாக்டர் 20, இலியாஸ் குல் 16, லாமா ஆட்டமிழக்காமல் 16, சர்மா 10 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.



பந்துவீச்சில் அப்துர் ரஸாக் 3, முஷாபிர் ர.ஃமான், காலித் மசூத், மொகமட் ரபிகியூ தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# ஆசிய கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்றும்

## ஸ்ரீகாந்த் கூறுகிறார்

இலங்கையில் நேற்று இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், அரபு எமிரேட்ஸ், ஹொங்கொங் ஆகிய ஆறு அணிகள் பங்கேற்கும் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டி தொடங்கியது.

இந்த நிலையில், இந்திய அணியின் முன்னாள் கப்டன் ஸ்ரீகாந்த், ஆசிய கிண்ணத்தை இந்திய அணி வெல்லும் எனக் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது -

கங்கூலி தலைமையிலான அணி மிகச்சிறப்பாக விளையாடி வருகிறது. பாகிஸ்தான் சுற்றுப் பயணத்திற்குப் பிறகு அதிக இடைவெளி விட்டு இதில் ஆடுவதால், அணிக்கு நல்ல ஓய்வு கிடைத்துள்ளது.

இதனால் வீரர்கள் மிகச்சிறப்பாக ஆடுவார்கள். இப்போதுள்ள அணி வலுவான அணி. மேலும் ஆசிய கிண்ணத்தை இந்திய அணி நிச்சயமாக வெல்லும் - இவ்வாறு அவர் கூறினார்.




# ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் இரட்டை சதம் அடிக்க முயற்சிக்கிறேன்

## ஷேவாக் தெரிவிப்பு

ஒருநாள் போட்டிகளில் இரட்டைச் சதம் அடிக்கும் நம்பிக்கையுடன் இருப்பதாக இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர தொடக்கவீரர் வீரேந்திர ஷேவாக் சூளுரைத்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் முச்சதம் அடித்த ஒரே இந்திய வீரர் என்ற பெருமைக்குரியவர் வீரேந்திர ஷேவாக். சமீபத்தில் இந்திய அணி பாகிஸ்தான் சென்றிருந்தபோது முல்தானில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இந்த இலக்கை ஷேவாக் எட்டினார். அடுத்ததாக மற்றொரு சாதனையை குறிவைத்திருக்கிறார் இந்த அதிரடி நாயகன்.

அதாவது, சர்வதேச கிரிக்கெட்டில் இதுவரை யாருமே சாதிக்காத சாதனையான ஒரு நாள் போட்டிகளில் இரட்டைச்சதம் அடிப்பதை குறிவைத்திருக்கிறார் ஷேவாக். இது குறித்து பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்த ஷேவாக் கூறுகையில் -

ஒரு நாள் போட்டிகளில் இரட்டைச்சதம் அடிப்பது என்பது எளிதான விடயமல்ல. அதேசமயம் இது முடியாத விடயமுமல்ல. தொடக்க ஆட்டக்காரர் என்ற முறையில் 50 ஓவர்களும் களத்தில் நின்று விளையாடினால், என்னால் இரட்டைச்சதம் அடிக்கமுடியும்.

நான் மட்டுமன்றி பிறராலும் இதைச் சாதிக்கமுடியும். அதற்கு 50 ஓவர்களும் விளையாடவேண்டியது மிகமிக அவசியமாகும் என்று கூறினார்.

ஆசிய கிண்ணப் போட்டியானது கடினமான போட்டியாக இருக்கும். ஏனெனில், வலுவான சில அணிகள் இதில் பங்கேற்கின்றன. யார் வெற்றி பெறுவர் என்பதை கணிக்கமுடியாது.



ஆனால் இரண்டு பயிற்சி முகாம்கள் மூலம் நாம் நல்லமுறையில் இந்தப் போட்டிக்காக தயாராகியுள்ளோம். ஆசிய கிண்ணத்தை வெல்லும் முனைப்புடன் உள்ளோம் எனத் தெரிவித்தார்.

# டெண்டுல்கரின் விக்கெட்டுக்கு 46 ஆயிரம் ரூபா பரிசு!




ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி நேற்று தனது முதல் ஆட்டத்தில் அனுபவம் இல்லாத ஐக்கிய அரபு எமிரேட்ஸை எதிர்கொண்டு விளையாடியது.

இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் நட்சத்திர வீரரும், உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரருமான டெண்டுல்கரின் விக்கெட்டை வீழ்த்தும் அரபு எமிரேட்ஸ் பந்து வீச்சாளர்களுக்கு 95 ஆயிரம் ரூபா பரிசாக வழங்கப்படும் என, அந்த அணியின் கப்டன் குரம்கான் தெரிவித்தார்.

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு

# பிரதேச சபைகளுக்கிடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி!

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு சுன்னாகம், மானிப்பாய் பிரதேசசபை உத்தியோகத்தர்களுக்கு இடையிலான சிநேகபூர்வ விளையாட்டுப் போட்டி ஒன்றினை நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக பிரதேசசபையின் செயலாளர் பி.விக்டர் தெரிவித்தார்.

இந்தக் கிரிக்கெட் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு மானிப்பாய் பிரதேசசபையின் சார்பில் தெரிவு செய்யப்பட்டவாகளின் பெயர் விபரம் வருமாறு.

செ.ரமேஷ், வி.ஜெயரட்ணசிங்கம், பொ.ஜனகன், பி.லக்ஸ்மன், பா.அகிலன், ச.மயூரன், ஆ.நித்தியவர்ணன், ம.சுதர்சன், செ.சந்திரகுமார், க.ஜீவானந்தன், யோ.மோகனதாஸ், கே.ஆரூரன், ச.கமலகாந்த், எஸ்.ஸ்ரீரங்கன், நா.குமணன், ப.விஜயகுமார், செ.தோமஸ், வி.கிரிதரன், சதீஸ்வரன், பிரான்சிஸ், கவாஸ்கர், நரேந்திரன், த.சிவசுதன்.

மேற்படி போட்டியாளர்களை குறித்த தினத்தில் காலை 8.30 மணிக்கு குறிப்பிட்ட மைதானத்தில் தவறாத சமூகம் தரும்படியும், இயலாதவர்கள் பிரதேசசபையின் உள்ளூராட்சி உதவியாளருக்கு அறிவிக்கும்படியும், ஏனைய ஊழியர்களை இதில் கலந்துகொண்டு போட்டியாளர்களை ஊக்குவிக்குமாறு, செயலாளர் கேட்டுள்ளார். (100)

### உதைபந்தாட்டப் போட்டியில் இன்று

தமிழீழ விளையாட்டுத்துறை யாழ் மாவட்ட பிரிவினரின் அனுமதியுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வதிரி தேவரையாளி யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு வல்வை அணியை எதிர்த்து கரவை சுடர் அணியும், பிற்பகல் 4 மணிக்கு தொண்டமனாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நெடியகாடு அணியும் மோதவுள்ளன.

### மென்பந்து சுற்றுப் ாட்டி

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழம் 6 பேர் கொண்ட 5 ஓவர் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டியொன்றை இன்று காலை 8.30 மணி முதல் கழக மைதானத்தில் நடத்தவுள்ளது.

இன்றைய போட்டியில் ஸ்பேஸ் வி.க, ைமக்கல் வி.க, திறிஸ்ரார் வி.க, பருத்தித்துறை ஐக்கிய வி.க, திக்கம் இளைஞர் வி.க, நெடியகாடு இளைஞர் வி.க, நாவலர் வி.க, மகேசன் வி.க ஆகிய அணிகள் கலந்து கொள்கின்றன.

### முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுப் போட்டி

வண்ணை ஆறுகால்மடம் அறிவொளி சனசமூகநிலைய முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு நிலையத்தின் தலைவர் எஸ்.தம்பிராசா தலைமையில் ஸ்ரீ வண்ணை வைத்திலிங்கம் வித்தியாசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ்.மாவட்டப் பணிப்பாளர் ஜெயராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி லோ.யோகராஜா சர்வோதய மாவட்ட இணைப்பாளர் ஸ்ரீமனோகரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (100)

# இளையோர் உதைபந்தாட்டம் கிளிநொச்சியில் இன்று ஆரம்பம்

மேஜர் முரளி நினைவாக தமிழீழ விளையாட்டுத்துறை நடத்தும் 2 ஆவது தமிழீழ தேசிய இளையோர் உதைபந்தாட்டப் போட்டிகள் இன்றும், நாளையும் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் - போட்டியாளர் அணி ஒழுங்கு, பொதுச் சுடரேற்றல், தேசியக் கொடியேற்றல் என்பன இடம்பெற்று காலை 9 மணிக்கு போட்டிகள் ஆரம்பிக்கப்படும்.

இவ்வாறே நாளை இறுதிநாள் நிகழ்வுகளும் நடைபெற்று விருந்தினர் உரை, நன்றியுரை மற்றும் பரிசில் வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன.

# இந்திய-பாகிஸ்தான் ஒருநாள் போட்டி நவம்பரில் நடைபெறவுள்ளது!

இந்திய கிரிக்கெட் சபையின் பவள விழாவையொட்டி பாகிஸ்தான் அணி நவம்பர் மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 ஒரு நாள் போட்டியில் ஆடவேண்டும் என, இந்திய கிரிக்கெட் சபை பாகிஸ்தானுக்கு அழைப்பு விடுத்தது.

இதை ஏற்றுக்கொண்ட பாகிஸ்தான் 3 ஒருநாள் போட்டியில் ஆட இயலாது என்றும் மாறாக ஒரு ஆட்டத்தில் ஆடுவதாகத் தெரிவித்துள்ளது.

அதன்படி இரு அணிகளுக்கும் இடையேயான ஒருநாள் போட்டி - நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடக்கிறது. போட்டி நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தடகள வீரர் போதை மருந்தில் சிக்கினார்

அமெரிக்க தடகள வீரர்களிடம் போதைமருந்து பழக்கம் இருந்து வருவதாக விசாரணை நடந்து வருகிறது. இந்த நிலையில் 100 மீற்றர் ஓட்டத்தில் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதிபெற்ற அமெரிக்க வீரர் எட்வர்ட்ஸ் - போதை மருந்து பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டது.

எனவே, அவர் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க தடைவிதிக்கப்படும். 27 வயதான எட்வர்ட்ஸ் 100 மீற்றர் ஓட்டத்தில் உலகசாதனை படைத்தவர். இவர் கடந்த ஆண்டு பரிஸில் நடைபெற்ற உலக போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கமும், 200 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கமும் வென்றார்.



தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது தாக்குதல் தளபதி லெப்.சீல (சாள்ஸ் அன்ரனி)னின் 21 ஆவது நினைவுதினத்தையொட்டி அலஸ்தோட்டம் நித்தியபுரி சார்ள்ஸ் விளையாட்டுத்திடலில் நடைபெற்ற - தலா ஐவர் கொண்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்பேட்டியில் வெற்றிபெற்ற செல்வநாயகபுரம் சண்டோஸ் கழக வீரர் அ.மரியதாஸுக்கு தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்ஞே விருது வழங்குவதைக் காணலாம். (04)

## சின்ன மீன் குஞ்சு



சின்னச் சின்ன மீன்குஞ்சே
சிதறி ஓடும் என் குஞ்சே
வண்ண வண்ண நிறக்குஞ்சே
வடிவான என் பொன் குஞ்சே

தொட்டி... தொட்டி... தொட்டி
கண்ணாடியிலான தொட்டி
முட்டி முட்டி மோதாதே
உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே

சினன விழி பலவர்ண மின் விளக்குகளே
அன்புடனே அண்ணா வழங்கிய
அரும் பரிசு. பசியாற பாசி வகை.. சிப்பி
சங்கெனவே கொண்டு வந்தான் என் தம்பி

உள்ளிருந்தே நீ உலகைப் பார்ப்பதுபோல
வெளியிருந்தும் சிலர் உன்னுலகைப் பார்க்கிறார்
தொட்டியின் உயரமே உன் சிறையின் பூட்டு
ஒரு துள்ளில் கிடைக்கும் சுதந்திரச் சாவி

ராகுலன்

## புதிர்கள்

1. சிவா பந்து ஒன்றை எறிந்தான். அது மூன்று அடி சென்று விட்டு எதையும் தொடாமல் அவன் கைக்கு மறுபடியும் திரும்பி வந்தது. எவ்வாறு வந்தது?

2. இந்த இடத்தில் ஆறுகள் இருக்கும். ஆனால், தண்ணீர் இருக்காது. நகரங்கள் இருக்கும். ஆனால், கட்டடங்கள் இருக்காது. காடுகள் இருக்கும். ஆனால், மரங்கள் இருக்காது. அங்கு மலைகள் இருக்கும். அதை நீங்கள் இலகுவாகத் தாண்டலாம். இவை எல்லாமே எம்முடைய பூமியில் உள்ளவை. என்ன இடம் அது?

**விடைகள்....**

1.பந்தை சிவா மேல் நோக்கி எறிந்தான்.
2.இடம் ஒரு காகிதம். புவியியல் வரை படம்தான் அது.

*சென்ற வார விடைகள்....*

### மூளைக்கு வேலை விடை

| | | | |
|---|---|---|---|
| 1 | 15 | 14 | 4 |
| 12 | 6 | 7 | 9 |
| 8 | 10 | 11 | 5 |
| 13 | 3 | 2 | 16 |

புதிர் விடை.

1. ஆண்கள் $5x2 = 10$
பெண்கள் $15x1 = 15$
குழந்தைகள் $10x1/2 = 5$
$30 = 30$

2.குழியில் எப்படி மணல் இருக்கும்.

## சித்திரக்கதை
## குறும்பு










கதை, ஓவியம் - ந.மருள் தொடரும்...

## ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்குப் பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகூட்ட வரைந்து அனுப்புங்கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீலவண்ணம், எண்ணெய் வர்ணம், கலர் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். கட்டாயம் தாளினை (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியங்களை கீழ்வரும் கூப்பனைப் பூர்த்திசெய்து, அதனுடன் இணைத்து அனுப்பவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்குப் பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - இளந்தேசிகள் கழகத்தினரால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :........................................
கற்கும் பாடசாலை :........................................
கற்கும் தரம் :........................................
வீட்டு முகவரி :........................................

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் . திகதி மாணவர் ஒப்பம்

ஓவியப்போட்டி
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## தெரிந்துகொள்ளுங்கள்

1.உலகத்தின் கூரை - திபெத்
2.நைல் நதியின் கொடை - எகிப்து
3.இருண்ட கண்டம் - ஆபிரிக்கா
4.இதயமுக நாடு - நேபாளம்
5.பெரிய ஜனநாயக நாடு - இந்தியா
6.இந்து சமுத்திரத்தின் முத்து - இலங்கை
7.ஐரோப்பாவின் நோயாளி - துருக்கி
8.ஏழு குன்று நகரம் - ரோம்

ச. மஞ்சுசி
தரம் - 7

இங்கே மடிக்கவும்



## விநோத தகவல்



சார்லி சாப்ளின் போல மாறுவேடம் போடும் போட்டி ஒன்று நடந்தது. அதில் பலர் போட்டியிட்டனர். தகுதிச் சுற்றுகள் முடிந்ததும், மூன்று பேர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டனர். அவர்களுக்குப் பேசுவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டது. மூன்றாவதாக வந்தவர் பேசினார். 'இந்தப் போட்டியில் கண்டிப்பாக முதல் பரிசு வாங்குவேன் என்று நினைத்தேன். ஆனால், மூன்றாவது பரிசுதான் கிடைத்தது. அதிலும் ஒரு சந்தோஷம் இருக்கு. மாறுவேடப் போட்டிகளில் வேடம் போட்டது யார் என்று தெரியக்கூடாது. அப்படிப் பார்த்தால், நான்தான் ஜெயித்தவன் ஏன் என்றால், நான்தான் உண்மையான சார்லி சாப்ளின்' என்றார்.

**சிந்தனைக்கு!**
எண்ணிக்கையில் குறைவான வார்த்தைகளுக்கு மதிப்பு அதிகம்



# சிறுவர் அரங்கம்

# நண்பர்கள் கட்டிய கப்பல்

எலிக்குட்டியாரும், கோழிக்குஞ்சாரும், பச்சைத்தவளையாரும், சிவப்புவண்டாரும், கொள்ளியெறும்பாரும் நல்ல நண்பர்கள்.

ஒருநாள் நண்பர்கள் ஐவரும் சேர்ந்து ஆற்றங்கரைக்குப் போனார்கள்.

ஆற்றிலே குதித்து நான் ஆனந்தமாக நீச்சலடிக்கப் போகிறேன் என்று சொன்னார் பச்சைத் தவளையார். எமக்கு நீச்சல் தெரியாதே என்று அவரது நண்பர்கள் கவலையோடு சொன்னார்கள்.



தவளையார் ஆற்றிலே குதித்து, ஆனந்தமாக நீந்தினார். நீச்சல் தெரியாது ஆற்றிலே இறங்கப் பயந்து, அவரது நண்பர்கள் கரையிலே கவலையோடு நின்றார்கள்.

நண்பர்களைப் பார்த்து நக்கலாகச் சிரித்தார் தவளையார். தவளையார் மீது பொல்லாத கோபம் கொண்டார் எலிக்குட்டியார். கவலை கொள்ளாதீர்கள் தோழர்களே. முயற்சி செய்தால் நம்மால் முடியாதது ஏதுமில்லை என்று சொன்னார் எலிக்குட்டியார்.



நண்பர்கள் நால்வரும் சேர்ந்து நல்லதொரு கப்பலைக்கட்டவும், அதில் ஏறி ஆற்றிலே பயணம் செய்யவும் முடிவு செய்தார்கள்.

கோழிக்குஞ்சார் பெரியதொரு ஆலம் இலையை எடுத்து வந்தார். எலிக்குட்டியார் தேங்காய் மூடி ஒன்றைத்தேடி எடுத்து வந்தார். கொள்ளி எறும்பார் ஈர்க்கில் ஒன்றை இழுத்து எடுத்து வந்தார்.



சிவப்புவண்டார் நூலத்துண்டு ஒன்றைக் எடுத்து வந்தார்.



தேங்காய் மூடியினுள் ஈர்க்கிலைச் சொருகி வைத்தார் எலிக்குட்டியார். ஆலம் இலையை ஈர்க்கிலோடு சேர்த்து இணைத்துப் பாய்மரம் அமைத்தார் கொள்ளி எறும்பார்.

ஈர்க்கிலையும், இலையையும் நூலால் இணைத்துக் கட்டி, கப்பலைப் பலப்படுத்தினார் சிவப்பு வண்டார்.

ஆற்றிலே பயணப்படத் தயாரானது நண்பர்கள் கட்டிய அழகான கப்பல்.

கப்பலைத் தள்ளி ஆற்றிலே இறக்கினார் எலிக்குட்டியார். சிவப்பு வண்டார் கூடநின்று குட்டி எலியாருக்கு உதவி செய்தார்.



ஆற்றிலே ஆனந்தமாக நீந்திக் கொண்டிருந்த பச்சைத் தவளையார் - தண்ணீரிலே மிதந்து போகும் நண்பர்களின் கப்பலைப் பார்த்து, வியந்து போய் நின்றார்.

அருமையான நண்பர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தனியாக வந்தது எவ்வளவு பெரிய தவறு என்பதை அவர் இப்போது உணர்ந்துகொண்டார்.



நண்பர்கள் நாங்கள் ஒற்றுமையாய்ச் சேர்ந்து ஒரு கப்பலைக் கட்டினோம், என்று பாட்டுப் பாடிக் கொண்டே எலிக்குட்டியாரும், கோழிக்குஞ்சாரும், கொள்ளி எறும்பாரும், சிவப்பு வண்டாரும் மகிழ்வோடு ஆற்றில் பயணம் செய்தார்கள்.



- யோ.சத்யன்

# மிக்கி மவுஸ்

கார்ட்டூன் வரைபவராக இருந்த வால்ட் டிஸ்னி - தயாரித்ததுதான் மிக்கி மவுஸ். மிக்கி மவுஸ் என்ற கார்ட்டூன் கதாபாத்திரத்தைத் தயாரிக்கும் பொழுது, அது மாபெரும் வெற்றியைக் குவிக்கும் என்று டிஸ்னிக்கு அப்போது தெரியாது.

எலி போன்ற அமைப்புக் கொண்ட இந்தக் கதாபாத்திரத்தை, டிஸ்னி தேர்ந்தெடுக்க காரணம் உண்டு. டிஸ்னி வேலை செய்துகொண்டிருந்த ஸ்ரூடியோவுக்கு ஒரு எலி வரும். அது அவரின் கையால் உணவு வாங்கிச் சாப்பிடும். அதனுடைய நினைவாகத்தான் மிக்கி மவுஸை டிஸ்னி படைத்தார்.

எலியாக இருந்தாலும் கையுறை போட்ட கைகளும், சப்பாத்துக்கள் போட்ட கால்களுமாக மனித உடல் போல்தான் மிக்கி வரையப்பட்டது. வரைவதற்கு இலகுவாக நான்கு விரல்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டது.

முதலில் மிக்கியை வைத்து இரண்டு கார்ட்டூன் படங்கள் உருவாக்கினார். மௌனப்படங்களுக்கு ஆர்வம் காட்டப்படாமையினால், எலியுடன் கூடிய கார்ட்டூன் படத்தை நவம்பர் 18- 1928 ஆம் ஆண்டில் உருவாக்கினார். அப்போது ஒலியமைப்பு சேர்ந்த படங்களைப் பார்த்திராத ரசிகர்கள், கையில் கிடைக்கும் எல்லாப் பொருட்களிலிருந்து இசையை உருவாக்கும் மிக்கியின் திறமையை மெய்மறந்து ரசித்தார்கள்.

அதற்குப்பிறகு மிக்கி நடித்த எல்லாப்படங்களுமே மிகப் பெரிய அளவில் புகழ்பெற்றன. அதற்கேற்ற மாதிரி - கதை அமைப்பதும், பெரிய வேலையாக டிஸ்னிக்கு இருந்தது. டிஸ்னி தீம்பார்க்கில் ஒவ்வொரு ஆண்டும் பல மில்லியன் பார்வையாளர்கள் மிக்கியுடன் கை கொடுத்து, புகைப்படம் எடுத்துக்கொள்வதைப் பெரும் பேறாகவே நினைக்கிறார்களாம்.

# கட்டத்தை நிரப்புங்கள்

1.வழக்கமான நடைமுறைக்கு உட்படாதது
2.குறைவு - எதிர்ச்சொல்.
3.ஆரோக்கியம் நிறைந்த உடல் அமைப்பு.
4.யானையின் கை.
5.திசை.
6.மட்டும் என்றும் சொல்லலாம்.



# குருவி கூட்டை அடைய வழிகாட்டுங்கள்



# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

5இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத் தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
..............................

.............................. ..............................
திகதி ஒப்பம்

.............................. ..............................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



# அன்புள்ள சிறுவர்களே!

அன்புள்ள சிறுவர்களே!

மனதில் உள்ளதை வெளிப்படுத்தவும், கற்றவற்றை நினைவு கூர்ந்து அவற்றுக்கு ஒரு வடிவம் கொடுக்கவும், தேர்வு ஒரு வாய்ப்பாக அமைகிறது. எனவே, திட்டவட்டமான விடைகள் அதிக புள்ளிகளைப் பெற்றுத்தரும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

கடைசி நேரம் வரை புத்தகங்களைத் திருப்பிக் கொண்டிருக்காமல் 10,15 நிமிடங்களுக்கு முன்னமே மண்டபத்துக்குச் சென்றுவிடுங்கள். தேர்வைக் கண்டு அஞ்சாதீர்கள். எப்படிச் சுற்றி வளைத்துக் கேட்டாலும் விடையளிக்க முடியும் என்ற திடமனதுடன் செல்லுங்கள். தேவையற்றவிதத்தில் மண்டபத்தின் முன்னால் நின்று சந்தேகங்களைத் தீர்க்க முயலவேண்டாம். அது சில சமயம் குழப்பத்தை ஏற்படுத்திவிடும்.

தேர்வு எழுதும்போது, கடைப்பிடிக்க வேண்டிய சில முக்கியமான விடயங்கள் இவை. தேர்வுத்தாளில் உங்களின் பதிவு எண், கேள்வி எண் போன்றவற்றை எழுதத் தவற வேண்டாம்.



வினாத்தாள் உங்கள் கையில் கொடுக்கப்பட்டவுடன் விடை எழுத முயற்சிக்க வேண்டாம். எத்தனை மணிநேர வினாத்தாள், எத்தனை கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். பின்னர், வினாக்களை நிதானமாகவும், தெளிவாகவும், முழுமையாகவும் வாசியுங்கள்.

வினாத்தாளில் 7 வினாக்கள் கொடுக்கப்பட்டு, 5 வினாக்களுக்கு விடையளிக்கும்படி கேட்டிருந்தால், எந்தெந்த வினாக்களுக்கு விடையளிப்பது, எந்த வரிசையில் விடையளிப்பது என்பதை விரைவாக முடிவு செய்யுங்கள்.

விடைகள் தெரிந்த வினாக்களுக்கு முதலில் விடையளிப்பதால், முதற் பக்கத்தில் திருத்தம், அழித்தல் இல்லாமல் எழுதமுடியும். விரைவாகவும், உற்சாகமாகவும் எழுதமுடியும். அதன்பின்னர், கடினமான வினாக்கள், கட்டுரைகளை கடைசியாக எழுதலாம். அவற்றை எழுதுவதற்கு யோசித்து நேரமெடுத்து எழுதலாம்.

ஒவ்வொரு வினாவுக்குரிய விடைகளுக்கும் இடையில் இடைவெளி விடுங்கள். சரியான வினா எண்ணைக் குறிப்பிடுங்கள்.

ஒரு கேள்விக்கு அதிகபட்சம் எவ்வளவு நேரம் ஒதுக்கலாம் என்று திட்டமிட்டு, எழுத ஆரம்பியுங்கள். வினாக்களின் புள்ளிகளுக்கு ஏற்பவும் விடை எழுதுங்கள்.

உதாரணமாக 3 புள்ளிகளுக்கு எழுதும் விடை - 5 புள்ளிகளுக்கு எழுதப்படும் விடையைவிட சுருக்கமாக இருக்கவேண்டும். 10 நிமிடங்களுக்கு முன்னதாக விடைத்தாளை முழுமையாகத் திரும்பப் பாருங்கள். இது முக்கியம். விடுபட்ட பக்களண், கேள்வி எண், சில திருத்தங்கள் போன்றவற்றைக் கவனியுங்கள். பின்னர் விடைத்தாளை வரிசைப்படுத்தி நூலால் கட்டிவிட்டு எழுதுங்கள்.

மிக முக்கியம் பரீட்சை மண்டபத்தில் ஏனைய மாணவர்களுடன் கதைக்காதீர்கள். பார்த்து எழுதாதீர்கள். தேர்வு நாளை தெளிவான மனதுடன், பதட்டமில்லாமல் எதிர்கொள்ளுங்கள்.

பாசமுடன் - சாரு அக்கா

# கூடி விளையாடு

*சென்றவாரத் தொடர்ச்சி...*

கே. வீ. குணசேகரம்



'மரத்தில் இருக்கும் போதே பார்த்தல் வேண்டும்'
'அழகை ரசித்தல் வேண்டும்'
'பிடிக்கக் கூடாது'
துன்பம் செய்வதும் கூடாது'
'தானியங்களைப் போடு'
'அவை இறங்கி வந்து
உண்ணும். அப்போது
பார்க்கலாம்'
'அழகை ரசிக்கலாம்'
அருணன் மகிழ்ச்சியால் துள்ளினான்.
அருணன் தானியங்களைப் போட்டான்.
குருவிகள் மரத்தால் இறங்கின.
முற்றத்தில் தானியங்கள் இருந்தன.
அவற்றை உண்டன.
வீமன் கோபத்துடன் குரைத்தது.
ஓடிச்சென்று கலைத்தது.
குருவிகள் பயத்துடன் பறந்தன.
மரத்தில் சென்று அமர்ந்தன.
அருணனுக்குத் துக்கமாக இருந்தது.
வீமன் மீது கோபம் வந்தது.
'வீமா உன்னோடு நான் கோபம் இனிக் கதைக்க மாட்டன்'
'அருணா என்னோடு கோபம் போடாதை'
'நான் இனி குருவிகளைக் கலைக்க மாட்டன்'
'அப்ப உள்ளுக்குப் போய்ப்படு'
வீமன் உள்ளே சென்றது.
குருவிகள் இறங்கின.
தானியங்களை உண்டன.
அருணன் மகிழ்ந்தான்.
வீமனுடன் குருவிகள் சேர்ந்தன.
வீமனோடு விளையாடின.
கதிரைக் கண்டு குருவிகள் பயந்தன.
'பூனை எமது எதிரி'
'நாயும் எதிரி தானே'
'நாய் நன்றி உள்ளது. எசமான் சொற்கேட்டு
நடப்பது. பூனை அப்படியானதல்ல'
'கவனமாக இருங்கள்'
அன்று அருணனின் பாடசாலை
விளையாட்டுப் போட்டி.
மாலை ஆறு மணியாகியும் அருணன் வரவில்லை.
குருவிகள் கவலையுடன் இருந்தன.





(தொடரும்...)

# உங்கள் கைவண்ணம்



இ.பார்த்தீபன்
தரம் - 9
குப்பிளான் விக்னேஸ்வரா
மகா வித்தியாலயம்



க.நர்மதன்
தரம் - 9
யாழ். மத்திய கல்லூரி

# இராணுவத்தினரின் காட்டுமிராண்டித்தனத்தின் அடையாளமே மாணவன் சஞ்சீவனின் படுகொலை!

## நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்

(யாழ்ப்பாணம்)

சிங்கள ஆட்சியாளர்களினதும் இராணுவத்தினரதும் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளை உலகறியவைத்த செயலில் ஒன்றுதான் சஞ்சீவன் படுகொலை செய்யப்பட்டமை என, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ். இந்துக்கல்லூரி மாணவனாக இருக்கும்போது படுகொலை செய்யப்பட்ட சஞ்சீவனின் நினைவு தினம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமையன்று நடைபெற்றவேளை, நினைவுரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் - 1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது மண் ஆக்கிரமிக்கப்பட்டபோது எமக்கும், எமது மக்களுக்கும் மறைமுகமாகப் பணி செய்தது ஒரு மாணவன்தான். எமது இனம் ஒடுக்கப்படுவதையும், சிதைக்கப்படுவதையும், சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்டப் பல்கலைக்கழக மாணவர்கள் முயன்றபோது, மாணவன் என்ற ரீதியில் சஞ்சீவன் தனது முழுப்பங்கையும் வழங்கினான்.

குறிப்பாக பளைப்பிரதேசத்தில் இருந்த மக்களை மீட்கும் பணியில் இந்த மாணவனின் பங்கும் பெரியது. மாணவர்களிடையே ஏற்பட்ட எழுச்சி காரணமாக சிங்கள இராணுவம் மாணவர்களை ஒடுக்க முற்பட்டது. அதன் காரணமாக சஞ்சீவனைப் படுகொலை செய்தது. இதன் விளைவைப் பின்னர் இராணுவம் நன்கு உணர்ந்து கொண்டது. சிங்கள ஆட்சியாளர்களின் காட்டுமிராண்டித்தனத்தை உலகம் அறிந்து கொண்டது.

சஞ்சீவன் எந்த மாணவ எழுச்சியில் தலைநிமிர்ந்து செயற்பட்டானோ, அந்த மாணவ எழுச்சி இன்னும் தொடரும் என மேலும் தெரிவித்தார். (தி)

## வவுனியா வளாகம் மீள ஆரம்பம்

(வவுனியா)

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் எதிர்வரும் 19 ஆம் திகதி மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் இடைநிறுத்தப்பட்டிருந்த விரிவுரைகள் யாவும் எதிர்வரும் 19 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (03)

## கல்விச் சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்கள் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டுள்ளனர். கிழக்கு மாகாணம் உள்ளிட்ட இலங்கையின் சகல பகுதிகளுக்கும் செல்லவுள்ள இவர்கள் அங்குள்ள புராதன விடயங்கள் மற்றும் விஞ்ஞான கல்விசார் விடயங்கள் ஆகியன தொடர்பாகவும் பார்வையிட்டவுள்ளனர். (94)



வெறிச்சோடிக் கிடக்கும் புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை

## புங்குடுதீவு வைத்தியசாலை

# இரு நாட்கள் மட்டுமே இயங்குவதால் நோயாளர்கள் பெரும் அசௌகரியம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மாவட்ட வைத்திய சாலை - வாரத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களிலேயே இயங்கிவருவதனால், அந்தப் பிரதேச நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த இரு நாட்களும் வேறு இடத்திலிருந்தே வைத்தியர் வந்து சேவையாற்றுவதுடன், மருந்து வகைகளும். வாகனத்தில் எடுத்து வரப்பட்டு சேவை முடிந்ததும் மீண்டும் கொண்டுசெல்லப்படுகிறது என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

தற்போதைய காலகட்டத்தில் பெருமளவு மக்கள் மீளக்குடியமர்ந்து வரும் வேளையில் வைத்தியவசதிகள் சீரின்றி இருப்பதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன், சொந்த இடங்களில் மீளக்குடியமர விரும்புபவர்களும் இந்தநிலையறிந்து தற்போது தங்கியுள்ள இடங்களிலேயே தொடர்ந்தும் வசிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, புங்குடுதீவுப் பகுதியில் தற்போது திலீபன் மருத்துவமனை இயங்கி வருவதால் - மக்கள் தங்களின் நாளாந்த, மற்றும் சிறு சிறு நோய்களுக்கான வைத்திய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# தமிழகத்திலிருந்து வந்த அகதிகளை யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் இருந்து அண்மை[illegible] யு.என்.எச்.சி.ஆர் நிறுவன உதவியுடன் விமானமூலம் அழைத்துவரப்பட்ட, நெடுந்தீவு பிரதேச அகதிகளை கடந்த புதன்கிழமையன்று யு.என்.எச்.சி.ஆர் நிறுவன அதிகாரிகள் நெடுந்தீவுக்கு சென்று, உதவிஅரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து சந்திப்பொன்றை நடாத்திச் சென்றனர்.

இவ்வாறு அழைத்துவரப்பட்ட மக்கள் தங்கள் சொந்த இடங்களில் வாழ்வதற்குரிய ஏற்பாடுகள் எவ்வாறு நடைபெறுகின்றன,

தொழிற்துறைகளை ஆரம்பிப்பதில் எவ்வாறான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன போன்ற தகவல்களைத்திரட்டிச் சென்றுள்ளனர்.

இந்தவார முற்பகுதியிலே யு.என்.எச்.சி.ஆர் நிறுவன உதவியுடன் 12 குடும்பங்களைச் சேர்ந்த 49 பேர் நெடுந்தீவில் மீளக்குடியமர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (113)

## தமிழ்த்தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கல்வி வலயமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் இந்த மாதம் 20ஆம் 21ஆம், 25ஆம் திகதிகளிலும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியும் வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கோட்டமட்டங்களில் வெற்றியீட்டியவர்களைக் குறிப்பிட்ட தினங்களில அனுப்பிவைக்குமாறு அதிபர்களை வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (122)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : இ.சுபாங்கனி
முகவரி : இத்தியடி, சாவகச்சேரி

பத்தாவது அகவையில்



பெயர் : க.சாகித்தியா
முகவரி : பெரியகுளம், கண்டாவளை

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


# கோயிலாக் கண்டியில் மீன் பிடிப்பதற்கு படையினர் கட்டுப்பாடு விதித்துள்ளனர்

(யாழ்ப்பாணம்)

கைதடியைச் சேர்ந்த ஸ்ரீ மகா விஸ்ணு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர், கோயிலாக் கண்டி கடற்பரப்பில் சுதந்திரமாக மீன்பிடிப்பதற்கு படையினர் அனுமதிக்கவில்லையென, யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கைதடி, நாவற்குழி தெற்கைச் சேர்ந்த கடற்தொழில் கூட்டுறவுச் சங்கத்தினரே நேற்றுமுன்தினம் இந்த முறைப்பாட்டைச் செய்தனர்.

இந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

கைதடி, நாவற்குழி தெற்குப் பகுதியிலுள்ள 180 குடும்பங்கள் கோயிலாக்கண்டி கடற்பகுதியிலே மீன்பிடிப்பதைப் பிரதான தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். இந்த மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்தவர்களாவர். இவர்கள் கோயிலாக்கண்டி கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்கு - கரையில் இருந்து சிறுதூரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு அப்பால் இராணுவத்தினர் குறுக்கே பாலம்போட்டு மீன் பிடிப்பதற்குத் தடை விதித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவன உயர் அதிகாரிகளுக்குத் தெரிவித்தும், அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ மகாவிஷ்ணு கடற்தொழில் கூட்டுறவுச் சங்கத்தினரின் முறைப்பாட்டையடுத்து, இந்த மீனவர்களுக்கும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதிக்கும் இடையிலான சந்திப்பொன்று மிக விரைவில் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பயிலுநர் ஆசிரியர்களுக்கும் 1250 ரூபா சம்பள உயர்வு

(யாழ்ப்பாணம்)

சகல அரசாங்க ஊழியர்களுக்கும் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அதிகரித்த 1250 ரூபா சம்பளம் வழங்கப்படவுள்ளது. இந்தத்தொகை வடக்கு - கிழக்கு மாகா ணத்தில் உள்ள பயிலுநர் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் விசேட பணிப்புரையை அடுத்து மாகாணக் கல்வி அமைச்சு இந்த நடவடிக்கையை எடுத்துவருகின்றது.

கடந்த ஆறுமாதகாலமாக மேற்படி பயிலுநர் ஆசிரியர்களுக்கு இந்தச் சம்பள அதிகரிப்பு வழங்கப்படாமல் உள்ளது. இந்த விடயம் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து அதிகரித்த சம்பளத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (122)

## நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில்

# கட்டாக்காலிகளைப் பிடிக்கும் நடவடிக்கை அடுத்தவாரம் ஆரம்பம்

நல்லூர்ப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் ஆடு, மாடுகளைப் பிடிக்கும் நடவடிக்கை அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபைச் செயலர் பொ.வைரமுத்து தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

யாழ். பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் ஏராளமான ஆடு, மாடு, நாய் முதலான கட்டாக்காலிகள் திரிகின்றன. அவற்றில் நாய்களைப் பிடித்து அழிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. நேற்றைய தினம் 15 கட்டாக்காலி நாய்கள் - எமது கட்டாக்காலி நாயொழிப்புப் பிரிவினரால் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன. இதே போன்று ஆடு, மாடுகளைப் பிடிக்கும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அவ்வாறு பிடிக்கப்படும் கட்டாக்காலிகள் தண்டப்பணம் அறவிடப்பட்ட பின்னர் விடுவிக்கப்படும் இல்லையெனில் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனைக்கு விடப்படும்.

இத்தகைய கட்டாக்காலி ஆடு, மாடுகள் பாடசாலைகள், சிறுவர் பாடசாலைகள், நூலகங்கள் மற்றும் பொது இடங்களை அசுத்தப்படுத்துவதுடன், வீதியோரத்துக்கும் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எமது பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் சில கிராமத் தலைவர்கள், சமூக முன்மாதிரிச் செயற்பாட்டாளர்கள் மூலமே இந்தக் கட்டாக்காலிகள் கட்டுப்படுத்தப்படவுள்ளன.

ஆடு, மாடுகள் வளர்ப்போர் அவற்றைக் கட்டிவைத்து வளர்ப்பதுடன் பிறருக்கு இடையூறு ஏற்படாதவகையிலும் பார்த்துக்கொள்வது சிரமங்களைத் தவிர்க்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## யாழ். சிறைச்சாலை

# பொலிஸ் உத்தியோகத்தரிடையே கைகலப்பில் இருவர் காயம்

யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்புக் காரணமாக, யாழ்.சிறைச்சாலை அதிகாரி சிவபாதசுந்தரம் தலையில் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் யாழ். சிறைச்சாலையில் இடம்பெற்றது. மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்.சிறைச்சாலையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தனது பணியைச் சரிவரச் செய்யாத காரணத்தால், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிடம் யாழ்.சிறைச்சாலை ஆணையாளர் காரணங்களை கேட்டபோது, ஏற்பட்ட முரண்பாடு காரணமாக யாழ். சிறைச்சாலை அதிகாரி தலையில் காயமடைந்தார்.

இதே சம்பவத்தின் போது சிறைச்சாலை பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரும் காயடைந்தனர்.

இவர்கள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். யாழ்.சிறைச்சாலை அதிகாரிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தபாற்கந்தோரின் எதிர்கால அமைவிடம் குறித்த கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 11 மணிக்கு சுன்னாகம் கதிரமலை சிவன்கோயில் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.



> கருணாவினது சிறகுகள் ஒவ்வொன்றாக வெட்டப்பட்டு வருகின்றன. இறுதியில், கருணா தான் நினைப்பது போல உயரப்பறக்க முடியாமல் குப்புறவிழுவார். சில வேளைகளிலே ஈ.பி.டி.பி. யினருடனும் இணைந்து கொள்வார். என்னவோ, கருணா இறுதியிலே தோற்கடிக்கப்படப் போகின்றமை நிதர்சனமே! அந்த நாளையே அனைவரும் எதிர்பார்த்துள்ளனர்.



# மாகாணசபை தேர்தல் முடிவுகள்

# சமாதானத்திற்கான ஆணையா? சலுகைகளுக்கான ஆதரவா?

மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் வெளியாகி தற்போது ஆட்சியில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெருவெற்றி பெற்றுள்ளதாகவும், அந்த வெற்றியானது சந்திரிகா அரசின் சமாதான முயற்சிகளுக்கு கிடைத்த மக்கள் ஆணையெனவும் ஆளும்தரப்பு முக்கியஸ்த்தர்கள் சிலர் பேசிவருகின்றனர். அத்துடன், அவர்கள் ரணில் தலைமையிலான கூட்டணியினர் முன்பு, முன்னெடுத்த சமாதான நகர்வுகளால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது எதிர்ப்பை மாகாணசபைத் தேர்தல் மூலமாக வெளிப்படுத்தியுள்ளனர் எனவும் கூறி வருகின்றனர்.

இவர்களது கூற்றுக்களில் எவ்வளவு உண்மைகள் இருக்கிறதோ இல்லையோ, மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் சமாதான நகர்வுகளுக்கு கிடைத்த மக்கள் ஆணையாக ஒரு போதும் கருதி விட முடியாது. அது ரணில் அரசு வழங்கத் தவறிய சிற்சில சிறு சலுகைகளுக்காக மக்கள் வெளிப்படுத்திய எதிர்ப்பும், தற்போது சந்திரிகா அரசு வெளியிட்டு வரும் பல வாக்குறுதிகளுக்குக் கிடைத்த ஆதரவுமே ஆகும்.

ஏனெனில், நாடாளுமன்றத் தேரதல்கள் நிறைவு பெற்று புதிய அரசு ஆட்சிக்கு வந்து பல மாதங்களாகியும் இது வரை எதுவித உருப்படியான குறிப்பிடத்தக்க சமாதான முன்னேற்றங்கள் எவையும் ஏற்படவில்லை. புதிய அரசு சமாதானத்திறகாக செலவிட்ட காலங்களை விட போர் முனைக்குச் செலவிட்ட காலங்களே அதிகம்.

அமெரிக்க படைகளுடன் இணைந்து கூட்டு இராணுவப் பயிற்சிகள், அமெரிக்காவிடமிருந்து போர்க்கப்பல் ஒன்றை அன்பளிப்பாகப் பெற்றுக் கொண்டமை, இராணுவப் பதவிநிலை கட்டமைப்பிலே புதிய மாற்றங்களை மேற்கொண்டமை, பிரதிப் பாதுகாப்பு அமைச்சு வடபகுதி படைத் தளங்களுக்கு, முப்படைத் தளபதிகள் சகிதம் விஜயம் செய்து இராணுவத்தினரை சந்தித்தமை, எல்லாவற்றுக்கும் மேலாக விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து விரட்டப்பட்ட கருணாவுக்கும் அவரது சகாக்களுக்கும் அடைக்கலம் கொடுத்து, அவர்களைப் பயன்படுத்தி, அவ்வப்போது தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவான சக்திகளை படுகொலை செய்து வரு கின்றமையென, புதிய அரசு அடுத்தடுத்துப் போருக்கான தயார்ப்படுத்தல்களையே மேற்கொண்டு வருகிறது. இது அனைவரும் வெளிப்படையாக அறிந்துள்ள விடயமே. இதனைச் சாதாரண சிங்கள மக்களும் அறியாமலிருக்க நியாயமில்லை.

எனவே, இந்த நிலையில் மாகாண சபைத் தேர்தல்கள் மூலம் கிடைத்த வெற்றி தமது சமாதான நகர்வுக்குக் கிடைத்த மக்கள் ஆணையென அரசும் அதன் பங்காளிகளும் கூறி வருவதை எப்படி ஏற்றுக் கொள்ளமுடியும். ஏதோ அரசதரப்பு மாகாண சபை தேர்தலிலே வெற்றி பெற்றது உண்மைதான். இந்த வெற்றி சிங்கள மக்கள் வெளிப்படுத்திய சமாதான ஆவலில் வழிவந்தது அல்ல. சிங்கள் மக்கள் போர் முனைப்போடு உள்ள அரசுக்கு வழங்கிய ஆதரவு, அல்லது இனவாத ஊடகங்களினால் ஏமாற்றப்பட்ட மக்களின் ஏமாளித்தனம் என்பதே உண்மை. அல்லாவிடில் தற்போதைய அரசின் சமாதான நிலைப்பாட்டிலே நம்பிக்கை கொண்டே சிங்கள மக்கள் வாக்களித்திருப்பின் ஒரு போதும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலமாக நிரந்தர அமைதித்தீர்வை காண முடியாது. அதற்குச் சிங்களத் தரப்பும், பொது மக்களும் தயாராக இருக்கமாட்டார்கள் என்றே கருத வேண்டும். ஏனெனில், புதிய அரசின் சமாதான நிலைப்பாடானது முக்கியமாக இறுதித்தீர்வு பற்றிப் பேசுவதாகவேயுள்ளது. புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக வரைபு தொடர்பாக பேசுவதாக



வில்லை.

ஆனால், விடுதலைப் புலிகளோ போரினால் சிதைவடைந்த தமிழர் தாயகத்தின் மீள்நிர்மாணப் பணிகளுக்காக இடைக்கால நிர்வாக அலகைக் கோரி வருகின்றனர். இதன் அடிப்படையிலேயே பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட வேண்டு மெனவும், உறுதியாகத் தெரிவித்து வருகின்றனர். எனவே, இரு தரப்பினரும் முரண்பாடான சமாதானக் கொள்கைகளைப் பின்பற்றும் போது, பேசித் தீர்ப்பது என்பது முடியாத காரியமே. இந்த சிக்கலான பிரச்சினையே தற்போது நோர்வே தரப்பு உள்ளிட்ட அனைவரையும் குழப்பி வருகிறது. இதனையும் மாகாணசபை தேர்தல்களிலே வாக்களித்த சிங்கள மக்கள் நன்கு அறிநதிருப்பர். அப்படியறிந்திருந்தும், சந்திரிகாவின் சமாதான நிலைப்பாடு சரியெனவாக்களித்திருப்பார்களாயின் அது கவலைப் படத்தக்க விடயமே!

வெளியாகியுள்ள மாகாணசபைத் தேர்தல்களிலே ஒரு பொதுமைப் பாடான நிலையைக் காணக்கூடியதாகவுள்ளது. அதாவது, தேர்தல் நடைபெற்ற மாகாணங்கள் அனைத்திலும் ஐம்பது வீதத்துக்கும் குறைவான மக்களே வாக்களித்துள்ளனர். எனவே இந்த ஐம்பது வீதத்திலும் குறைவான மக்களே ஆளுந்தரப்பு கூறுவது போல அவர்களது சமாதான முயற்சிகளுக்கு தமது ஆணையை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே, வாக்களிக்கச் செல்லாத ஏனைய ஐம்பது வீதத்திற்கும் மேற்பட்டோர், தற்போதைய அரசின் சமாதான நகர்வுகளிலே அதிருப்தி கொண்டுள்ளனர் என்றே கருத வேண்டும் இதுவே தர்க்க ரீதியான வாதமாகும். இதனையும் அரச தரப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், அது ஒரு போதும் அதற்குத் தயாராக இருக்கமாட்டாது.

மேலும், கடந்த மாகாணசபைத் தேர்தல் முடிவுகளை நன்று நுனித்தாராய்ந்து பார்த்தால், இன்னுமொரு உண்மை வெளிப்படும். அதாவது கல்வியறிவுள்ளோரை அதிகமாகக் கொண்ட மாவட்டங்களிலே வாக்களித்தோர் வீதம் வெகு குறைவாக வேயுள்ளது. உதாரணமாக கொழும்பு, கம்பஹா மாவட்டங்களை எடுத்துக் கொண்டால் -

கொழும்பு மாவட்டத்திலே பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட பதினைந்து லட்சமாகும். ஆனால், செலுத்தப் பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அண்ணளவாக ஆறு லட்சத்து ஐம் பதினாயிரம் ஆகும். ஏறத்தாள எட்டு லட்சத்து ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் அளிக்கப்பட வில்லை.

அதே போன்றே கம்பஹா மாவட்டத்திலும் பதிவு செய்யப்பட்ட வாககுகளின் மொத்த எண்ணிக்கை ஏறக்குறைய பதினான்குலட்சம். ஆனால், அளிக்கப்பட்ட வாக்குகளோ, ஆறுலட்சத்து ஐம்பதினாயிரத்திலும் குறைவானவை. எனவே ஏழு லட்சத்து ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் அளிக்கப் படவில்லை.

இந்த இரு மாவட்டங்களும் இலங்கையைப் பொறுத்தவரையிலே மிகவும் முக்கியமான மாவட்டங்களாகும். ஏனெனில் அதிகளவான கல்வியறிவுள்ளோரைக் கொண்ட மாவட்டங்கள் இவையேயாகும். இதனை நாம் பல்கலைக்கழக வெட்டுப் புள்ளியிடலின் போதும் அவதானிக்கமுடியும். எனவே, கல்வியறிவு நிரம்பியோரை அதிகமாகக் கொண்டோரை உள்ளடக்கிய வாக்காளர்களைக் கொண்ட மாவட்டங்களின் தேர்தல் முடிவுகள் கூறும் செய்தி தான் யாது?

தற்போது நாட்டிலே என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது? நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது? புதிய அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது? என்பதை இந்த மாவட்ட மக்கள் நன்கு அறிவர். எனவே இவர்களின் வாக்குகள் தான் உண்மையான நிலையை எடுத்துக் கூறும். நாடாளுமன்றத் தேரதல்களின் போது யார் ஆட்சியை பிடிக்கப் போகின்றார்கள் என்பதை தீர்மானிப்பதிலே இந்த இரு மாவட்டங்களும முக்கியமானவையாகும். எனவே, இந்த மாவட்டங்கள் மாகாணசபைத் தேர்தல் மூலம் கூறும் செய்திகள் என்ன? இதனை அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டும். இது அதன் எதிர் கால நலனுக்கு ஆரோக்கியமான தாக அமையும்.

கல்வியறிவு குறைந்த வெறும் சலுகைகளையே நிரந்தரத் தீர்வுக்கான வழியென நம்பும் சிங்கள மக்கள் வழங்கிய வாக்குகளே சந்திரிகாவை தாங்கும் பலமாக அமைந்துள்ளன. வேலையற்றோருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப் படும். பஸ் கட்டணங்கள் குறைக்கப்படும் என விடுக்கப்பட்ட வாக் குறுதிகளை நம்பியே சாதாரண மக்கள் வாக்களித்துள்ளனர். எனவே, இது சமாதானத்திற்கு கிடைத்த வெற்றியல்ல சலுகைக்குக் கிடைத்த சந்தர்ப்பம்.

எது எவ்வாறிருப்பினும் அரசு சமாதான ஆணையைதான் மீண்டும் பொது மக்களிடமிருந்து பெற்றுள்ளதாக வெறும் வாய்வழி அறிக்கைகளை விடாது, அதனை செயல் வடிவிலே காட்ட வேண்டும். அரசுக்கு மக்கள் வழங்கிய 'சமாதான ஆணையை'சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

மாகாணசபைத் தேர்தல்கள்

> ஈ.பி.டி.பி.யினருடன் நெருங்கிய தொடர்பைப் பேணி வரும் கருணா, அவர்களது உதவியுடன் ஊடகங்கள் வாயிலாகவும் செய்தி வெளியிட்டு வருகின்றார். அவரது கட்சி மீன் சின்னத்தைக் கொண்டு செயற்பட வுள்ளது. அது ஏலவே ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் வரதர் அணியினரது தேர்தல் சின்னமாகும். எனவே இதனைப் பாவிப்பதை விடுத்து, கருணா கோடரிக்காம்பைத் தனது சின்னமாகப் பாவிப்பதே பொருத்தமானதாகும்.

மூலம் கிடைத்த சமாதான ஆணையின் சூடு ஆறுவதற்கிடையில், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க யாழ். படைத் தளங்களுக்கு விஜயம் செய்து அங்கு களத்திலுள்ள இராணுவ வீரர்களைச் சந்தித்து உற்சாக மூட்டியுள்ளார். யுத்தப் பிரியரான ரத்னசிறி - முகமாலை, காரைநகர், காங்கேசன்துறை என அநேக வடபகுதி படைத்தளங்களுக்கும் விஜயம் செய்து படையினர் மத்தியிலே பல ஆசை வார்த்தைகளை கூறி உரையாற்றியுள்ளார்.

அத்துடன், பாதுகாப்பு நிலவரங்கள் குறித்தும் கேட்டறிந்ததுடன் அது தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்கும் படியும் கோரியுள்ளார். இது தானா அரசிற்கு மக்கள் வழங்கிய சமாதான ஆணையின் வழியான செயற்பாடு இது உண்மையிலேயே தேவையானதா எந்த வழியில், எந்த நோக்கில் பார்த்தாலும் அரசு போருக்கான ஆயத்தங்களையே மேற்கொண்டு வருகின்றது. இதனை உணர்ந்து கொண்டே புலிகள் தற்போது மிகவும் அதற்குப் பொருத்தமான நிலைப் பாடுகளை கடைப் பிடித்து வருகினறனர்.

அத்துடன் அரசிடம் என்றுமே ஒரு தெளிவான சமாதான நிலைப் பாடு இருந்ததே கிடையாது. காலையில் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேசப்படுமென அறிக்கை விடுவதும், மாலையில் இறுதித்தீர்வு தொடர்பாகவே பேசப்படுமென அறிக்கை விடுவதும் அரசுக்கு வேலையாகி விட்டது. முதலில் அரசு தனது நிலைப்பாட்டை தெளிவாக, உறுதியாக எடுத்துக் கொள்ளவேண்டும் அதன் பின்பே மற்றைய நகர்வுகளை மேற் கொள்ள முடியும்.

மேலும் கடந்த வாரம் கருணா அணியைச் சேர்ந்த பலர் கைது செயயப்பட்டும், மரணதண்டனை தீர்ப்பு விதிக்கப்பட்டும் உள்ளனர். விடுதலை என்பதை வியாபாரப் பொருளாக்கிய கருணா, வறுமையில் வாடும் ஏழைத தமிழ் இளைஞர்களுக்குப் பணத்தாசையை ஊட்டி அவர்களை தனது நயவஞ்சக வலையிலே வீழ்த்தி தேச விரோதச் செயல்களிலே ஈடுபடுத்தி வருகின்றார்.

அப்பாவி இளைஞர்களின் உயிரைப் பணயம் வைத்து தமது சொந்த நலன்களைக் கவனித்து வரும் கருணா அணியினர் தொடர்பாக - பொது மக்களும், இளைஞர்களின் பெற்றோர்களும், இளைஞர்களும் விழிப்பாக இருக்க வேண்டும். இல்லாவிடின் புனிதமான விடுதலைப் பாதையிலே தடைக்கல்லாக விழுபவர்களை உரிய முறையிலே அகறற வேண்டியதென்பது தவிர்க்கப்பட முடியாததேயாகும். எனவே அப்பாவி இளைஞர்கள் தமது உயிர்களை வீணாக இழக்கக் கூடாது. இதனையே விடுதலைப்புலிகளும் தெரிவித்ததுடன் தமது வேண்டு கோளாகவும் விடுத்துள்ளனர்.

கருணா அணியின் முக்கிய பொறுப்புக்களிலே நியமிக்கப்பட்ட பலரும், தற்போது கருணாவைக் கைவிட்டுத் தலைமறைவாகி வருகின்றனர். கருணாவின் பேச்சாளராகச் செயற்பட்ட வரதன் என்பவரும் கருணாவை விட்டுவிலகியுள்ளார். பின் அவரது இடத்திற்கு, மாறன் எனும் புனைபெயருடன் நியமிக்கப்பட்ட 'சச்சிமாஸ்டர்' என்பவரும் மட்டக்களப்பு சிறைச் சாலையிலே தடுப்புக் காவலில் இருந்த போது சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இவ்வாறு கருணாவினது சிறகுகள் ஒவ்வொன்றாக வெட்டப்பட்டு வருகின்றன. இறுதியில், கருணா தான் நினைப்பது போல உயரப் பறக்க முடியாமல் குப்புறவிழுவார். சில வேளைகளிலே ஈ.பி.டி.பி. யினருடனும் இணைந்து கொள்வார். என்னவோ கருணா இறுதியிலே தோற்கடிக்கப்படப் போகின்றமை நிதர்சனமே! அந்த நாளையே அனைவரும் எதிர்பார்த்துள்ளனர்.

ஈ.பி.டி.பி.யினருடன் நெருங்கிய தொடர்பைப் பேணிவரும் கருணா, அவர்களது உதவியுடன் ஊடகங்கள் வாயிலாகவும் செய்தி வெளியிட்டு வருகின்றார். அவரது கட்சி மீன் சின்னத்தைக் கொண்டு செயற்படவுள்ளது. அது ஏலவே ஈ.பி.ஆர்.எல். எவ் இன் வரதர் அணியினரது தேர்தல் சின்னமாகும். எனவே இதனைப் பாவிப்பதை விடுத்து, கருணா கோடரிக்காம்பைத் தனது சின்னமாகப் பாவிப்பதே பொருத்தமானதாகும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பழுதுஎண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்ஓர் எழுபது கோடி உறும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சில செய்திகளும் ; ஒரு முக்கிய செய்தியும்

12.07.2004

ஆறு மாகாண சபைகளுக்கான தேர்தல் முடிவுகள் வெளியான பன்னர், ஆறு மாகாண சபைகளையுமே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் கைப்பற்றியதையடுத்து அது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள திருத்த அறிக்கையில்-இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை ஒன்றை அமைத்த, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு கடைப்பிடித்து வரும் கொள்கைகளுக்கு மாகாண சபைத் தேர்தல்கள் முடிவுகள் மூலம் மக்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளார்கள் என்றும், போர் நிறுத்த உடன்படிக்கைகளை தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கும், விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை தொடங்கவும் அவர்கள அரசுக்கு ஆணை வழங்கியுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

..........

இனறைய தினம், புதிய பிரதிப் பாதுகாப்பு அமைச்ச ரான ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் இராணுவத்தளபதி சாந்தகொட்டேகொட, கடற்படைத்தளபதி தயா சந்தகிரி, விமானப்படைத்தளபதி டொனால்ட் பெரேரா ஆகியோரையும் உள்ளடக்கிய உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று யாழ் குடாநாட்டுக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு, முன்னரங்கக் காவல் நிலைகளையும், குடாநாட்டு முகாம்கள், உயர்பாதுகாப்பு வலய பிரதேசங்கள் அனைத்தையும் பார்வையிட்டதுடன், பலாலி இராணுவ தலைமையகத்தில் உயர்மட்ட பாதுகாப்பு மாநாடொன்றை நடத்தினர்.

இதில் யாழ் குடாநாட்டில் சகல பாதுகாப்புப்படையின் உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

சமாதான சூழல் நிலையிலும் படைத்தரப்பினர் எந்த நேரமும் உஷார் நிலையிலிருக்க பணிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

படையினருக்கு உற்சாகமூட்டும் வகையில் சில வாக்குறுதிகளும் அமைச்சரால் வழங்கப்பட்டதாம்.....

..........

14.07.2004

சர்வதேச போர் திறனாய்வு முன்னறிவிப்பு மையமான 'ஸரஃ போர்' என்ற அமைப்பு, விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி மீண்டும் போரை ஆரம்பிக்கும் திட்டத்தின் அடிப்படையில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும், விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து விரட்டப்பட்ட கருணாவைப் பயன்படுத்தி குழப்பங்களை ஏற்படுத்துவதன் மூலமும், மோதல்களை உருவாக்குவதன் மூலமும், நெருக்கடிகளை உண்டுபண்ணி விடுதலைப் புலிகளை போருக்கு தூண்டி மீண்டுமொரு யுத்தத்தைத் தொடரவே அரசாங்கம் திட்டமிட்டு செயற்பட்டுவருகிறது என எச்சரிக்கை தொனியில் கருத்து வெளியிட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது, இலங்கையில் மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படுவது தவிர்க்கமுடியாத ஒன்று என பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களில் இருந்து கிடைத்த தகவல்களை ஆதாரம் காட்டியும் அந்த அமைப்பு கருத்து தெரிவித்துள்ளது.

15.07.2004

தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தமொன்றை ஆரம்பித்தால் அதற்கு முகங்கொடுக்க இராணுவமும், கடற்படையும் தயாராக உள்ளதாக புதிய இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்துள்ளதாக செய்திகளை ஊடகங்கள் வெளியிட்டிருந்தன.

இராணுவத்துக்கும் கடற்படைக்கும் நவீன ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

..........

விடுதலைப் புலிகளை முறியடித்து வெற்றிகொள்வதற்கான போர்த் தந்திரோபாயங்களை அமெரிக்கப் படையினர் வழங்கி வருவதாகவும் -

அமெரிக்க, இலங்கை அரசுகளின் இரகசிய கூட்டுத்திட்டத்தின் முதல் கட்டமாகவே கருணாவுக்கு பி.பி.சி மூலம் செய்தி வழங்கவும், புதிய அரசியல் கட்சி அமைக்கவும் அரசு உதவி செய்துள்ளதுடன், மக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டு பண்ணும் வகையிலான செயற்பாடுகளுக்கு அரசு பின்னணியில் இயங்கிவருவதாகவும் சர்வதேச போர்திறனாய்வு முன்னறிவிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

16.07.2004

ஜனாதிபதி செயலகம் தேர்தல் முடிவு தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்ட இடைக்கால நிர்வாகம் தொடர்பான கருத்துக்கள், ஜனாதிபதியின் கருத்துக்களல்ல என்று அமைச்சர் மங்கள சமரவீர கூறியதாகத் தெரியவந்துள்ளது.

இடைக்காலநிர்வாக அதிகாரசபை தொடர்பாகவோ, அதன் அடிப்படையிலோ ஜனாதிபதி பேச்சுக்களை தொடங்க முயன்றால் அரசுக்கு வழங்கும் ஆதரவை தாம் விலக்கிக்கொள்ளப் போவதாக ஜே.வி.பி எச்சரிக்கை விடுத்ததாக செய்திகள் கூறுகின்றன.

...........

இவையாவும் இந்த வாரத்தில் ஊடகங்கள் ஊடாக மக்களைச் சென்றடைந்த செய்திகளாகும்.

இதில் எந்தவொன்றையும் அரசோ, ஜனாதிபதியோ மறுக்கவோ, எதிர்க்கவோ, நிராகரிக்கவோ இல்லையென்பதே இப்போது கவனத்தில் கொள்ளவேண்டிய மிகமுக்கிய செய்தியாகும்.

அப்படியானால் இந்தச் செய்திகள் யாவும் புதிய அரசின் சமாதானம் தொடர்பான உறுதிப்பாடு குறித்த சந்தேகங்களை உறுதிப்படுத்தியதாகவே கருதவேண்டியுள்ளது. இரண்டரை ஆண்டுகால போர்நிறுத்த மற்றும் அமைதிச்சூழலுக்கு அரசின் தற்போதைய செயற்பாடுகள் யாவும் முற்றுப்புள்ளியை வைக்கும் தன்மை கொண்டாதாகவே உள்ளன.

மீண்டும் சமாதானத்திற்கான யுத்தம் என்ற தனது போர் வெறிச் சித்தாந்தத்தையே ஜனாதிபதி அமுல்படுத்தவிரும்புவதாகவே தமிழ் மக்கள் எச்சரிக்கையுடன் உணர்ந்துகொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்தையே அரசினதும், ஜனாதிபதியினதும் நடவடிக்கைககள் ஏற்படுத்தியுள்ளன என்றால் அது உண்மையே.

இந்த நிலையில் நிரந்தர தீர்வு குறித்து யுத்தம் மூலம் பேசவே ஜனாதிபதி விரும்புகிறார் என முடிவுக்கு வரவேண்டியதும் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

# நாடும் நடப்பும்




செய்தி:-
இடைக்கால நிர்வாக அதிகார சபை தொடர்பாகவோ அதன் அடிப்படையிலோ ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை நடத்த முனைந்தால் நாம் அதனை வன்மையாக எதிர்ப்போம். அரசுக்கான ஆதரவை நீக்கிக்கொள்வோம். -ஜே.வி.பி.

### மனித உரிமைகள் ஆணைக்குழுவின்

# யாழ்.அலுவலக அதிகாரிகள் கிளிநொச்சிக்கு விஜயம்

யாழ்.மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் மற்றும் விசாரணை அதிகாரிகள் கிளிநொச்சி மனிதஉரிமைகள் மையத்திற்கு விஜயம் மேற்கொண்டு, அங்குள்ள நிலைகள் குறித்து ஆராய்ந்தனர்.

யாழ்.மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் றோகித பிரியதர்சன மற்றும் விசாரணை அதிகாரிகளான சுரேந்திரராஜா, பாரூஸ் ஆகியோரே கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் செய்து கிளிநொச்சி மனிதஉரிமைகள் மையத்தில் கருணாரட்ணம் அடிகளாரைச் சந்தித்து உரையாடினர்.

அரச திணைக்களம், மற்றும் நிறுவனங்களில் நிலவும் மனிதஉரிமை மீறல் செயற்பாடுகள் குறித்து, யாழ்மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு கிளிநொச்சி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மூலம் அறிவிப்பதெனவும்,

அதேபோல், யாழ்.மாவட்டத்தில் நிலவும் பிரச்சினைகள் குறித்து கிளிநொச்சி மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்குத் தெரியப்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், இருதரப்பினராலும மனிதஉரிமைகள் பாதுகாப்புச் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## நீதிமன்ற தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை

குடாநாட்டின் நீதிமன்றங்களில் கடமையாற்றும் அனைத்து தற்காலிக ஊழியர்களும் நிரந்தரமாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை யாழ்.மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தொகுதிக்கான அடிக்கல் நாட்டப்பட்டதைத் தொடர்ந்து, வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற பிரதான நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் கே.பி.எஸ்.வரதராஜா இதனைத் தெரிவித்தார்.

# மட்டு- அம்பாறை எம்.பிக்கள் இன்று வன்னியில் சந்திப்பு

(கிளிநொச்சி)

மட்டு-அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சந்திப்பு இன்று காலை 10.30 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள சமாதானச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மட்டக்களப்பு மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், பா.அரியநேந்திரன், த.கனகசபை, எஸ்.ஜெயானந்தமூர்த்தி, க.தங்கேஸ்வரி அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து விடுதலைப்புலிகளின் அரசியறதுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்துரையாடுவார் எனவும், இந்தச் சந்திப்பில் மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி த.ரமேஸ், மட்டு-அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் ஆகியோர் கலந்து கொள்ளலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## களவாகப் பொருட்களை கடத்த விமான நிலையத்தில் கள்ளக் கதவு

(கொழும்பு)

சுங்கத் திணைக்களத்துக்குத் தெரியாமல் களவாக கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாகப் பொருட்களைக் கடத்துவதற்கு இரகசிய வழியொன்றைப் பயன்படுத்திய, அலுவல்கள் முகாமையாளர்கள் இருவர் பொது விமானசேவை அமைச்சின் உத்தரவுக்கு அமைய வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த அலுவல்கள் முகாமையாளர்கள் இருவரும், விடுதலைப புலிகளின் ஆதரவாளரான முன்னாள் விமான நிலைய உத்தியோகத்தர் ஒருவரது உதவியாளர்கள் என்பது விசாரணைகளின் போது தெரியவந்தது.

இந்த இரகசியக் கதவின் சாவி அந்த முகாமையாளர்களிடமே இருந்ததாகவும் பொது விமான சேவை அமைச்சின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## யாழ்.பல்கலைக் கழகத்தில் சட்டமாணி கற்கை நெறி

(யாழப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் அடுத்தவருடம் சட்டமாணிக் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தற்போது யாழ்.பல்கலைக்கழகத்தில் கலைப்பீடம், முகாமைத்துவ வர்த்தகபீடம், விஞ்ஞானபீடம், விவசாயபீடம், பட்டப்பின்படிப்புகள்பீடம் ஆகிய பீடங்களே இயங்கிவருகின்றன.

அடுத்த ஆண்டு முதல் சட்டமாணிக் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், சட்டபீடத்தினை அமைப்பதற்கு பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

# அடையாள அட்டை வைத்திருப்பது தேர்தலுக்கு கட்டாயமானதாம்

### சட்டம் கொண்டுவர அமைச்சரவை தீர்மானம்

அனைத்துத் தேர்தல்களிலும் வாக்காளர்கள் தேசிய அடையாள அட்டை கொண்டு வருவது கட்டாயமானது எனும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

கடந்த 14 ஆம் திகதியன்று கூடிய அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றப் பொதுத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சிமன்றத் தேர்தல் போன்றவற்றில் வாக்களிக்கச் செல்லும் வாக்காளர்கள் தேசிய அடையாளஅட்டை கொண்டு வரவேண்டும் எனும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வருவதற்கான தீர்மானத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தச் சட்டத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக தேசிய அடையாளஅட்டை, கடவுச் சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றோடு தொடர்புபட்ட புதிய நடைமுறைகளைத் தயாரிக்கும் சட்டத்தையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சர்வதேச புலனாய்வு அரசியல் -வன்கூவரிலிருந்து ரிஷி



# மீண்டும் அமெரிக்காவுக்கு தலைவலி

(நேற்றைய தொடர்ச்சி)

அத்துடன் ஏற்கனவே இதை வாங்கி வைத்திருக்கும் சில நாடுகளும் ரஷ்யாவிடம் Warranty Extesion கேட்டு வந்துநிற்கப் போகின்றன. நிலமை ரஷ்யாவுக்குக் கொஞ்சம் சிக்கல்தான்.

ஏனென்றால், இதே வகையான ரஷ்ய ஏவுகணைகள், ரஷ்யாவுக்கு வெளியே பல இடங்களில் வெவ்வேறு நாடுகளில் இருக்கின்றன.

கடந்த காலத்தில் ரஷ்யாவால் விற்கப்பட்ட இந்த வகை SLBM களின் எண்ணிக்கைகள் சரியாக எவ்வளவு என ரஷ்யாவைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

ரஷ்யா தான் தயாரிக்கும் ஆயுதங்களை முக்கியமாக ஏவுகணைகளை வெளியே வைக்கும்போது சொல்லும் எண்ணிக்கைகள் பாதிக்குப் பாதிதான் உண்மையாக இருக்கும். அத்துடன் ஒவ்வொரு நாட்டு இராணுவத்துக்கும் ஏற்ற விதத்தில் சிறுசிறு மாற்றங்களைச் செய்து வேறுவேறு Model No. வகைகளைப் பொருத்துவிப்பதில் ரஷ்யா பிரபல்யமானது. இதனால், S.S.N - 23 என்ற பெயரில் எந்த எந்த நாடுகளில் எவ்வளவு எவ்வளவு எண்ணிக்கையில் இருக்கின்றன என்று சொல்வது கஷ்டமென்றாலும், சுமார் 30 இல் இருந்து 65 வரையிலான எண்ணிக்கையில் S.S.N - 23 வகை ஏவுகணைகள் ரஷ்யாவுக்கு வெளியே இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

இந்த எண்ணிக்கையில் அநேகமாக எல்லாமே ரஷ்யாவின் Operational Warranty க்கள் இருக்கச் சந்தர்ப்பங்கள் அதிகம். காரணம் என்னவென்றால் அமெரிக்கத் தயாரிப்புக்களோ சைனீஸ் தயாரிப்புக்களோ கொடுக்கும் ஆரம்ப Warranty - 8 - 10 வருடங்களில் முடிவடைந்துவிட்டால், அவர்கள் அதை நீடிப்பதில்லை. மாறாகப் புதிய ஏவுகணைகளை வாங்கும்படி கூறுவார்கள். ஆனால், ரஷ்யா அப்படியல்ல. Warranty முடிவடைந்த பின்னரும் உபயோகிக்கப்படாத ஏவுகணைகளுக்கு மேலதிக பணம் வாங்கிக்கொண்டு Off the Base Free Entry Check செய்து கொண்டு Warranty ஐ மூன்று மூன்று வருடங்களாக நீடித்துக் கொண்டுபோவார்கள். இந்த நடைமுறைதான் ரஷ்யாவுக்கு வெளி நாட்டு ஆயுத விற்பனையை ஒரு இக்கட்டான சூழ்நிலையை இப்போது ஏற்படுத்தவுள்ளது.

இந்த வகை ஏவுகணைகள் ரஷ்யாவிற்கு வெளியே எங்கெல்லாம் இருக்கிறது. ஒரு பட்டியல் போட்டால் அந்தப் பட்டியலில் பல நாடுகள் இடம்பெறும். இந்தியாவில் கூட ரஷ்யன் S.S.N. - 23 Base Model Structure உடன் சில பழைய ஏவுகணைகள் உண்டு. இந்தியா அவற்றில் சில மாற்றங்களைச் செய்துவைத்திருந்தாலும், அடிப்படைத் தொழில்நுட்பம் ரஷ்யத் தொழில்நுட்பமே.

இப்போது ரஷ்யாவிற்கு S.L.B.M. களைப் பொறுத்தவரையில் செயற்திறனை நிரூபிக்க வேண்டிய கட்டாயம். ரஷ்யாவிற்கு இது கொஞ்சம் புரட்சியான விடயம். ஏனெனில் ரஷ்ய S.L.B.M. களில் முக்கியமாக S.S.N - 23 ரகங்களில் அடிப்படைத் தொழில்நுட்பத்தில் கோளாறு இருக்கின்றது என நம்புவது சற்றுக் கடினம். அதாவது, Structure அல்லது Basic Format இல் தவறு இருந்தால் இவை இவ்வளவு காலமும் இயங்கியிருக்கமுடியாது. கோளாறு வருவதென்றால் அவற்றின் Functional Opreate இல்தான் வரவேண்டும். அல்லது அதைவிடப் பெரிய விவகாரம் ஒன்று பின்னால் இருக்கிறது.

அந்த சாத்தியத்தையும் இல்லையென்று மறுக்கமுடியாது. அந்த சாத்தியம் என்னவென்றால், ஏவுகணை சரியாக இயங்காதவாறு வெளியேயிருந்து செயற்படும் தடைகள்.

இவை இரண்டு விதமாகச் செயற படலாம். ஒன்று ரஷ்யாவிற்குள் ஆள் வைத்து Programme Diversion மூலம் செய்யலாம். அல்லது இரண்டாவதாக ரஷ்யாவிற்கு வெளியேயிருந்தபடி ஒரு சற்றலைற்றிலுள்ள Jamming Devise மூலம் குழப்பியடிக்கலாம். இன்றைய நிலையில் இது ரஷ்யாவில் சாத்தியமில்லை.

முதலாவது முறையில் ரஷ்யாவுக்குள் ஆள் வைத்திருப்பதென்பது பத்து, பதினைந்து வருடங்களுக்கு முன்பு இருந்தது போல மிகமிகக் கடினமான காரியம் அல்ல. ரஷ்யாவில் இருக்கும் ஏவுகணைகளில் தரையிலிருந்து ஏவப்படும் ஏவுகணைகள் அல்லது வானத்தில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகள் ஆகியவற்றின் தயாரிப்பு பொருத்தப்படல் விநியோகம் ஆகியவை - அவர்களின் மிகவும் பாதுகாப்பு அதிகமான இராணுவக் கட்டுப்பாட்டுத் தளங்களிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால், S.L.B.M களின் கதை அப்படியல்ல என்று கூறப்படுகிறது. S.S.N. - 23 ரக ஏவுகணைகள் தொழில்நுட்ப ரீதியாக Develop செய்யப்படுவது Missile Design Duro என்ற இடத்தில் இவற்றின் தயாரிப்பு மற்றும் பாகங்களின் இணைப்பு இடம்பெறுவது 'சஸ்மயோற்' என்ற இடத்திலுள்ள தொழிற்சாலைகளில்.

இந்த இரு இடங்களிலும் இராணுவம் சம்பந்தமான வேலைகள் மாத்திரமல்லாது பொதுமக்களின் பாவனைக்கான இயந்திர உற்பத்திகளும் நடைபெறுவதால், இறுக்கமான பாதுகாப்புடைய இராணுவக் கட்டுப்பாட்டு ஏற்பாடுகள் இல்லையென்று சொல்லப்படுகிறது. அத்துடன், Plant களில் ஏற்கனவே சில வெளிநாட்டு உளவாளிகள் ஊடுருவியதாக - 2001 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஒரு Internal Investigation இடம்பெற்றதாகவும் ஒரு தகவல் உண்டு.

எனவே, இந்த இரு இடங்களில் ஏதாவது ஒரு இடத்தில் வைத்து S.L.B.M களின் Set களில் Programme இல் ஏதாவது செய்யப்பட்டிருக்கச் சாத்தியம் இருக்கிறது. அப்படி நடைபெற்றிருந்தால், அந்த Programme மாற்றங்கள் - ஏவுகணை நிஜமாக ஏவப்படும்வரை வெளியே தெரியவராது.

இந்த ஊகப்படி ஏதாவது நடந்திருந்தால் அது Operation Securite 2004 இல் அந்த ஏவுகணைகள் ஏவப்படமுடியாமல் போனதற்கான காரணங்களில் ஒன்றாக இருந்திக்கலாம்.

இரண்டாவது சற்றலைற்றுக்கள் மூலம் Signal களை குழப்பியடித்து இயங்கவிடாது செய்திருக்கக்கூடிய சாத்தியம் மேற்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றின்மேல் மிதந்து கொண்டிருக்கும் அமெரிக்க சற்றலைற்றுக்கள் உட்பட சில சற்றலைற்றுக்களின் Ground Reaching Range ரஷ்யாவரை செல்லக்கூடியது.

இவை ரஷ்யாவின் பரப்பிற்கு வெளியே மிதப்பதால் ரஷ்யாவால் எதுவும் செய்யமுடியாது என்ற நிலையில் அவர்களால் செய்யக்கூடியது எந்த Satelnite ற்றுக்களில் Signal களை ரஷ்ய நிலப்பரப்பில் இருந்து Jame பண்ணுவதுதான். ஆனால், அதிலிருக்கும் சிக்கல் ரஷ்ய Jamming Equipment இன் செயற்திறன் எந்தளவு என்பதுதான்.

Satellite ஒன்றிலிருந்து சிக்னல்கள் தரைவரை வருவதைத் தடுத்து Jame பண்ணக்கூடிய Jame Equipment எப்படி இயங்குகின்றது என்றால் அவை ஒரு குறிப்பிட்ட



திசையில் அல்லது கோணத்தில் வரும் Signal களை Base பண்ணித்தான் இயங்குகின்றன. உதாரணமாக தென்மேற்குத் திசையில் 9 பாகை கோணத்தில் வரும் சற்றலைட் சிக்னல்களை ஒரு குறிப்பிட்ட Jame Equipment தடுத்து நிறுத்தும்படி Set பண்ணமுடியும். அந்த சிக்னல்களை வெளியேற்றும் Satellite வானில் ஒரே இடத்தில் நிற்காமல் ஒரு குறித்த பரப்பளவிற்குள் நகர்ந்துகொண்டிருந்தால், கீழே Set பண்ணப்பட்டிருந்த Jamming Equipment உம் அதே திசையில் அதே வேகத்தில் தனது கோணத்தை Signal களை Follow பண்ணி மாற்றிக்கொள்ளும். இதனால் Jamming Equipment Satellite தனக்கு கண் மட்டத்தில் எப்போதுமே வைத்திருக்கும் அருமையான தொழில்நுட்பம்.

அநேக நாடுகளில் தரையில் இராணுவ சம்பந்தமான அதி முக்கியத்துவமான இராணுவ விடயங்கள் இடம்பெறும் இடங்களில் எந்தத் தொழில்நுட்பத்துடன் கூடிய Jamming Equipment Satellite இருக்கின்றன. ரஷ்யா உட்பட. இதில் சிக்கல் எப்போது வருமென்றால் - ஒன்றுக்கு மேற்பட்ட Position களில் இருந்துகொண்டு ஒரே நிலப் பகுதியைக் கண்காணிக்கும் போது ஏற்படும். அப்போது வேறுவேறு திசைகளில் வேறுவேறு கோணங்களில் தரையை நோக்கி Signal கள் வரப் போகின்றன. அப்படியான நேரத்தில் தரையில் இருக்கும் Equipment இன் நிலை எந்தத் திசையில் இருந்து வரும் எந்த சிக்னலை முக்கியமாக Jame பண்ண வேண்டும் என்ற விடயத்தில் சிக்கலாகப் போய்விடும்.

இப்படியான சூழ்நிலையில் அதாவது ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியை 3 அல்லது 4 Satellite ஒரே நேரத்தில் வானத்தில் வேறு இடங்களில் இருந்து கண்காணிக்கும் நிலையில் Satellite களின் சிக்னல்களை தரையிலிருந்து குழப்பியடிக்கும் கருவி இரண்டு வகைகளில் இயக்கப்படலாம்.

முதலாவது Automatic Defection மற்றையது Specific Target Defection. இதில் Spefictarget Defection என்பது மிகவும் இலகுவான ஒன்று. நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல குறித்த திசையில் இருக்கும் Satellite இன் மீது கண்வைப்பது. ஆனால், All wide Defection என்பது தரையில் உள்ள கருவியின் Signal Direunit ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எந்தத் திசையில் இருந்து தரைக்கு Signal வருகின்றது என்பதைக் கண்டு பிடித்து எந்தத் திசையை நோக்கி தனது Signal Receiving Antena வை Automatic ஆகத் திருப்பிக் கொள்வது. அப்படிச் செய்யும்போது ஒன்றுக்கு மேற்பட்ட Signal கள் வெவ்வேறு திசையில் வந்தால் என்ன நடக்கும். Very Simple - தொழில்நுட்பம் கைகொடுக்கும்.

(தொடரும்)

நாடாளுமன்ற நடைமுறைகள் - வல்லையூரான்



# நாடாளுமன்றம் பற்றி அதிகமானோர் அறியாத சுவையான தகவல்கள் சில...

ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டேயில் அமைந்துள்ள இலங்கையின் நாடாளுமன்றம்தான் எங்களது நாட்டில் மிக உயர்ந்த மதிப்பு வாய்ந்த நிறுவனமாகக் கவனத்திற்கொள்ளப்படுவது. நாட்டின் நாடர்ளுமன்றத்தினுள் வேறெந்த இடத்திலும் காண்பதற்குக் கிடைக்காத விதமாகக் குறிப்பிட்ட சில புதுமையான விடயங்கள், சம்பிரதாயங்கள் ஆகியன உள்ளன. இனி, தற்போது நாடாளுமன்றம் பற்றி எல்லோரினது அவதானமும் ஈர்க்கப்பட்டுள்ளமையால் இந்த வாரம் அவைகளைப் பற்றிய சுவையான தகவல்கள் சிலவற்றை உங்களுக்குத் தரலாமென எண்ணுகின்றோம்.

மேஜர் வீ.பீ.கருணாரத்ன என்பவர் மிக நீண்டகாலம் இலங்கை நாடாளுமன் றத்தினுள் பிரதி சேவிதராகக் கடமை புரிந்த ஒருவர். அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களை வைத்துக்கொண்டே நாடாளுமன்றம் பற்றியும் அங்கு இடம்பெறும் தகவல்களையும் உங்களுக்குத் தொகுத்துத் தருகின்றோம்.

### நாடாளுமன்றத்தின் முதன்மை ஆசனம் சபாநாயகருக்கு உரிமையான விதம்

முற்காலத்தில் அரச சபையில் தலைமை வகித்தது நாட்டின் மன்னரே. இந்தக் காரணத்தால் குறிப்பிட்ட சில நீதிகளை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்குச் செல்கின்ற பொழுது அரசனுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையில் பல மோதல்கள் உண்டாயிற்று. அதன் பிரதிபலனாக - அந்த மோதல்களுக்கு தலைமை வகித்த பிரதிநிதி அரசனால் சிறைத்தண்டனையைப் பெற்றுக்கொள்ள அல்லது சிரச்சேதம் செய்யப்படுவதற்கு உட்பட்டான்.

அரசனை விமர்சனம் செய்வதனால் இடையூறுகளுக்கு உட்பட நேர்வதனால் மக்கள் பிரதிநிதிகள், அரசனிடம் - அவன் அரச சபைக்கு வராமல் அதற்குப் பதிலாக பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரை அனுப்பும்படி கூறினார்கள். அதன்படி அரசனால் அனுப்பப்பட்டவரது கடமைகளாக - நாடாளுமன்றத்தினுள் நிகழ்பவைகளைப் பார்த்துக் கேட்பது தொடக்கம் ஒரு எழுத்து விடாமல் அவற்றை அரசனுக்குத் தெரிவிப்பதே. அந்தப் பதவிதான் பின்பு ஆங்கில மொழியில் SPEAKERS எனவும் சிங்களத்தில் 'கத்தா நாயக்க' என்றும் தமிழில் 'சபாநாயகர்' என்றும் ஆனது.

இலங்கையிலும் 1931 ஆம் ஆண்டு வரை அரச சபையின் தலைமையை வகித்தது பிரித்தானியாவின் மகாராணி நியமித்த தேசாதிபதி ஆவார். 1931 ஆம் ஆண்டின் பின்புதான் சபாநாயகர் ஒருவர் அரச சபைகநு நியமிக்கப்பட்டார்.

### நாடாளுமன்றத்திற்கு செங்கோல் வந்த விதம்

இந்த செங்கோல் நாடாளுமன்றத்திற்கு உடசென்றது கடந்த 1200 வருடம் வரைக்கும் நீண்டு செல்கின்றது. அந்த நாட்களில் உலகின் அரச சபைகளில் அரசருக்குப் பதிலாக சபாநாயகர் வந்தவிதம் பற்றிப் பார்த்தோம். இனி மன்னர் தன் அதிகார பலத்தினைக் காட்ட செங்கோலைப் பயன்படுத்தினார். இன்றும் அந்த உயர் படையதிகாரிகள் அப்படி அதுபோன்ற ஊன்றுகோலைப் பாவிக்கும் விதத்தினைக் காண முடியும். மன்னர் தனது அதிகார பலத்தினை இராஜ சபையின் மக்கள் பிரதிநிதிகளுக்கு நினைவுபடுத்துவதற்காக அந்த ஊன்றுகோலை தனது முக்கிய பாதுகாப்பாளரிடம் கொடுத்து அரச சபைக்கு அனுப்பினார். அதை அரச சபையினுள் கொண்டுவரும் பொழுது அங்கு இருக்கும் அனைவரும் எழுந்து மன்னனின் பொருட்டு அதற்குக் கெளரவம் வழங்கினார்கள். பின்னர் அரச சபை முடியும்வரை முன்பக்க இடமொன்றில் அது வைக்கப்பட்டிருக்கும். அந்த ஊன்றுகோலை எடுத்துவரும் நபர்தான் சேவிதராக நியமிக்கப்பட்டார்.

1948 இல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததன் பின்னர் பிரித்தானிய அரசினால் விசேட அன்பளிப்புக்கள் 3 அனுப்பப்பட்டிருந்தன. அதில் ஒன்றுதான் அப்பொழுது இருந்த பிரதமருக்கு அனுப்பப்பட்ட உத்தியோகபூர்வ வாகனம். மற்றையது சபாநாயகருக்கு அனுப்பப்பட்ட நாற்காலி. மூன்றாவதுதான் அந்த ஊன்றுகோல். அந்த ஊன்றுகோலுக்கு இங்கு 'செங்கோல்' என்ற பெயர் கிடைத்தது.

### சபாநாயகரை ஆசனத்திற்கு அழைத்துச் செல்லும் வழமை

புதிய சபாநாயகர் தெரிவுசெய்யப்பட்டதன் பின்பு அவரை - பெயரை முன்மொழிந்த, வழிமொழிந்த இருவரினாலும் அவரை ஆசனத்திற்கு அழைத்துச் செல்லும் சம்பிரதாயம் நாடாளுமன்றத்தினுள் நிலவுகின்றது. இது தொடர்பாக முதன்முதலில் நிகழ்ந்த நிகழ்வு புதுமையானது.

இந்த சம்பிரதாயத்தை முதலில் அறிமுகப்படுத்தியது 'ட்ராக் ரூ த செயார்' (DRAG TO THE CHAIR). அதன் அர்த்தம் ஆசனத்தை நோக்கி இழுத்துச் செல்வது என்பதாகும்.

முதற் காலத்தில் அரசனுக்குப் பதிலாக சபாநாயகர் அரச சபைக்கு நியமிக்கப்பட்டார் எனப் பார்த்தோம். இனி அரச சபையின் அனைத்தையும் மன்னனுக்கு அறிவிக்க வேண்டி நேர்ந்தது - சபாநாயகருக்கோ சில வேளைகளில் விரும்பாதவைகளை சபாநாயகரிடமிருந்து மன்னர் கேட்க நேர்ந்தால், மன்னரது பேச்சுக்களுக்கு மாத்திரமன்றி இடையூறுகளுக்குக் கூட சபாநாயகர் முகம் கொடுக்க நேர்ந்தது. ஆகவே, இந்தச் சபாநாயகர் பதவியை பொறுப்பேற்பதற்கு அன்றைய காலகட்டத்தில் யாருமே விருப்பத்தினைக் காண்பிக்கவில்லை. (தொடரும்)

## தனியார் பாடசாலையில் தீவிபத்து

# நூற்றுக்கும் மேல் மாணவர்கள் உடல் கருகிப் பலியாகினர்!

### தமிழ்நாடு கும்பகோணத்தில் சம்பவம்

தீப்பற்றிய பாடசாலைக் கட்டடம்



(சென்னை)

தமிழ்நாடு கும்பகோணத்தில் உள்ள தனியார் பாடசாலைக் கட்டடத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளிச் சிறார்கள் உடல்கருகிப் பலியாகினர்.

நேற்றுக்காலை 11.30 மணியளவில் நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

கும்பகோணத்திலிருந்து ஐந்து கிலோ மீற்றர் தொலைவில் தாராசுரம் பகுதி உள்ளது. இங்கு மூன்று பாடசாலைகள் ஒரே இடத்தில் இயங்கி வருகின்றன. இங்குள்ள மூன்றுமாடிக் கட்டடத்தில் மூன்றாவது மாடியில் சிறுவர் வகுப்புகள் நடைபெற்றுவருகின்றன. இந்த மூன்றாவது மாடியின் கூரை ஓலையால் வேயப்பட்டிருந்தது.

இந்த மூன்று பாடசாலைகளுக்கும் மதிய உணவு வழங்குவதற்காக சமையற்கூடம் ஒன்று உள்ளது. இங்கு வழமைபோல நேற்றும் சமையல்வேலை நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை, எதிர்பாராத விதமாகத் தீப்பொறிகள் ஓலையால் வேயப்பட்ட வகுப்பறைகள்மீது பட்டுத் தீப்பிடித்தன. கண்ணிமைக்கும் நேரத்தில் தீ மளமளவென வகுப்பறை முழுவதும் பரவியது.

இதனால் முதலிரு மாடிகளிலும் இருந்த உயர்வகுப்பு மாணவர்கள் வெளியே ஓடித்தப்பினர். ஆனால், மூன்றாவது மாடியிலிருந்த சிறுவர் பாடசாலை மாணவர்கள் வெளியேவரமுடியாமல் தீக்குள் அகப்பட்டனர்.

தீயைக்கண்டு பயந்து ஒட்டுமொத்தமாக எல்லா மாணவர்களும் மேல்மாடியிலிருந்து வெளியேறமுயன்றனர். ஆனாலும், ஒருவரையொருவர் முண்டியடித்ததால் நெருக்கடி ஏற்பட்டு பெரும்பாலான மாணவ, மாணவிகள் வகுப்பறைகளுக்குள் சிக்கிக்கொண்டனர். அவ்வாறு சிக்கிய சின்னக் குழந்தைகளால் கடைசிவரை தப்பமுடியவில்லை. இவவாறு வகுப்பறைக்குள் சிக்கிய மாணவர்களில் 67 பேர்கருகி உயிரிழந்தனர். சிகிச்சை பலனின்றி 15 பேர் உயிரிழந்தனர். இந்தத் தீ விபததில் பாலர் பாடசாலை ஆசிரியர்களும் சிலர் உயிரிழந்தனர்.

உயிரிழந்த சிறுவர்களின் உடல்கள் அடையாளம் தெரியாத அளவுக்குக் கரிக்கட்டை போல் கருகிவிட்டன. பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளைத்தேடி அலைந்தவண்ணம் உள்ளனர். மீட்கப்பட்ட மாணவர்களில் 200 பேர் பலத்த தீக்காயங்களுடன் அரச, தனியார் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 50 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

சமையல் அறையில் மின்கசிவு ஏற்பட்டதாலேயே தீவிபத்து ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

தீயில் கருகிய சிறார்கள்



## ஈராக்கிலிருந்து தனது படைகளை விலக்கத் தொடங்கியது பிலிப்பைன்ஸ்




ஈராக்கில் நிலைகொண்டுள்ள பிலிப்பைன்ஸ் படையினரின் தளபதி உட்பட பத்துப்பேர் நேற்று அங்கிருந்து நாடுதிரும்பியதாகப் பிலிப்பைன்ஸ் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மிகுதியாக உள்ள படையினரும் விரைவில் அங்கிருந்து வெளியேற்றப்படுவரென பிலிப்பைன்ஸ் நாட்டு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் டீலியா அல்பேட் தெரிவித்தார்.

இவ்வாறு ஈராக்கிலுள்ள படையினரை வெளியேற்றுவதற்குக் காரணம், கடத்தப்பட்ட தமது நாட்டுப் பிரஜை உயிருடன் விடுதலை செய்யப்படவேண்டும் என்பதற்காக என பிலிப்பைன்ஸ் அரசு தெரிவித்தது.

எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தமது படைகள் வெளியேறாதெனத் தெரிவித்திருந்த பிலிப்பைன்ஸ் அரசு நேற்று திடீரென இந்த முடிவை அறிவித்தது.

இதனையடுத்து இஸ்லாமிய ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட பிலிப்பைன்ஸ் நாட்டு பிரஜை விடுதலை செய்யப்படுவாரென ஆயுததாரிகள் அறிவித்துள்ளனர். பிலப்பைன்ஸ் அரசின் இந்த முடிவை அந்த நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் வரவேற்றுள்ளனர்.

ஆனால், பிலிப்பைன்ஸ் அரசின் இந்த முடிவை அமெரிக்காவும், அவுஸ்ரேலியாவும் வன்மையாகக் கண்டித்துள்ளன. பிலிப்பைன்ஸ் அரசின் இந்த முடிவு, இஸ்லாமிய ஆயுததாரிகளுக்கு பிழையான அறிவுறுத்தலை ஏற்படுத்துமென அமெரிக்கா தெரிவித்தது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தால் நிலைமை மேலும் மோசமடையுமென அவுஸ்ரேலியப் பிரதமர் ஜோன் ஹோவாட் தெரிவித்தார்.

இதேவேளை ஓரேஞ் நிற ஆடையுடன் தலையில்லாத நிலையில் திக்றிற் ஆற்றங்கரைப்பகுதியில் சடலமொன்று கண்டுபிடிக்கப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது. இந்தச் சடலம் கடத்தப்பட்ட பல்கேரிய வாகனச் சாரதியெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அமெரிக்காவில் ஓரினத்திருமணங்கள் தடைசெய்யப்படும் என்கிறார் புஷ்!



(வொஷிங்ரன்)

அமெரிக்காவில் ஓரினத் திருமணங்களைச் சட்டபூர்வமற்றவையாக்குவதறகான நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்.டபிள்யூ.புஷ் தெரிவித்தார்.

ஓரினத் திருமணங்களைச் சட்டபூர்வமற்றவையாக்குவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் அமெரிக்க செனற்சபையில் தோல்வி கண்டதையடுத்தே அமெரிக்க அதிபர் இந்தக்கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க யாப்புச் சட்டங்களிலே மாற்றத்தினை கொண்டுவந்து - ஆணிற்கும், பெண்ணிற்கும் இடையேயான திருமணங்களை மட்டும சட்டபூர்வமானவை என அறிவிபபதற்கான சந்தர்ப்பத்தைத் தான் தேடிக்கொண்டிருப்பதாக அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபரின் இக்கருத்திற்கு ஓரினத் திருமணத்தை ஆதரிப்பவர் மத்தியில் இருந்து கடும் எதிர்ப்பு தோன்றியுள்ளது.

அமெரிக்க செனற் சபையில் ஜோர்ஜ்.டபிள்யூ.புஷ்ஷின் இக் கருத்துத் தோற்றுப்போனதைத் தொடர்ந்து, அடுத்தகட்ட நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அமெரிக்க ஜனாதிபதியின் சட்ட வல்லுனர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்கர்களைப் பொறுத்தவரையில் அரசியல் யாப்பினை புனிதமான ஒன்றாகவே மதிக்கின்றனர். இந்நிலையில் தமது யாப்பில் மாற்றங்களை அடிக்கடி செய்வதை அமெரிக்கர்கள் விரும்பாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 200 வருடங்களில் அமெரிக்க யாப்பில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு 11000 தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும், 17 தடவைகள் மட்டுமே மாற்றங்கள் செய்யப்பட்டன.

அமெரிக்காவில் உள்ள 50 மாநிலங்களில் 38 மாநிலங்கள் ஏற்கனவே ஓரினத் திருமணங்கள் சட்டபூர்வமற்றவை என அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




## பணயக் கைதியைக் காக்க— ஈராக்கிலிருந்து சவுதி கம்பனி அங்கிருந்து வெளியேறுகிறது

(பாக்தாத்)

சவுதி அரேபியாவைச் சேர்ந்தவர் பைசல் அல் நைகெய்ட் இவர் லொறி கம்பனி தொடக்கி லொறி ஓட்டிவருகிறார். இவரது கம்பனியில் சாரதியாக எகிப்து நாட்டை சேர்ந்த முகமது காராபாவி தொழில் புரிந்து வந்தார். அவரை ஈராக் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர்.

அவரை விடுவிக்கக் கோடிக் கணக்கில் பணம் தரவேண்டும் என்று தீவிரவாதிகள் கேட்டனர். 75 லடசம் ரூபா தருவதற்கு பைசல் முன்வந்தார். ஆனால், தீவிரவாதிகள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை

இதைத் தொடர்ந்து 72 மணி நேரத்திறகுள் சவுதி கம்பனி ஈராக்கை விட்டு வெளியேறவேண்டும் இல்லாவிட்டல் காராபாவியைக் கொன்று விடுவோம் என்று தீவிரவாதிகள் மிரட்டினர்.

பணயக் கைதி உயிர் பிழைப்பதற்காகக் கம்பனியை மூடிவிட பைசல் தீர்மானித்துள்ளார். இதை அவர் அல் - ஜசீரா தொலைக்காட்சி மூலம் தெருவித்ததோடு காராபாவியை விடுதலை செய்யும்படியும் பைசல் கேட்டுக்கொண்டிருக்கிறார்.



## ஈராக்கில் ஐ.நா.தூதுவராக பாகிஸ்தான் அதிகாரி!

(பாக்தாத்)

ஈராக் நாட்டுக்கான ஐ.நா. சபை பொதுச் செயலாளர் கோபி அனானின் சிறப்புப் பிரதிநிதியாக பாகிஸ்தான் அதிகாரி அஷ்ரப் ஜஹாங்கீர் குவாஸி நியமிக்கப்பட்டார்.

அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதரான இவர், சமீபத்தில் இந்தப் புதிய பொறுப்பை ஏற்றிருக்கிறார். அவர் அடுத்த மாதம் ஈராக் செல்கிறார்.

நேற்று முன்தினம் அவர் ஐ.நா.தலைமைச் செயலகத்திற்குச் சென்று அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்தப்பதவியில் முன்பு இருந்த செர்ஜியோ வியேய்ரா டி மெலோ பாக்தாத்தில் கடந்த ஆண்டு தீவிரவாதிகளால் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜோர்ஜ் புஷ் மகள் தேர்தல் பிரசாரம்!

அமெரிக்க அதிபர் தேர்தல் நவம்பர் மாதம் நடக்கவிருக்கிறது. இந்தத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் கெரி, தற்போதைய அதிபரும் குடியரசுக் கட்சி வேட்பாளருமான ஜோர்ஜ் புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிடுகிறார்.

இருவருமே இப்போது தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். புஷ்ஷுக்கு ஆதரவாக அவரது மனைவி லாரா புஷ் மட்டுமன்றி, அவரது மகள் ஜென்னாவும் பிரசாரக் களத்தில் குதித்துள்ளார்.

கல்லூரியில் படிக்கும் ஜென்னா படிப்பை விட பிரசாரத்தில் தான் முழுக்கவனம் செலுத்துகிறார். பிரசாரத்துக்கு செல்லும்போது அவர் நாகரிக ஆடைகளை அணிந்து கொண்டு கவர்ச்சியாகச் செல்கிறார். பத்திரிகைகளுக்கும் அந்த உடையிலேயே போஸ் கொடுக்கிறார்.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மேலும் 54 மாணவருக்கு பல்கலைக்கழக அனுமதி!

2003/2004 ஆம் ஆண்டுக்கான வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கை மூலம் மேலும் 54 பேருக்கு யாழ். பல்கலைக் கழகத்தில் கல்வி கற்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பெயர்ப்பட்டியலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, யாழ். பல்கலைக்கழகத்துக்கு அனுப்பியுள்ளது.

புதிதாக அனுமதி பெற்றோரின் விபரம் வருமாறு -

**உயிரியல் விஞ்ஞானம்**

எஸ். நிர்மலகாந்தன் (வவுனியா), வி. ஸ்ரீபார்த்தீபன் (வவுனியா), ரி.காந்தராஜா (முல்லைத்தீவு), பி.கஜிதா (அச்சுவேலி), எஸ்.துளசி (அரியாலை), ரி.அருமைநாயகம் (பண்டத்தரிப்பு), ஆர்.செந்தில்மாறன் (யாழ்ப்பாணம்), இசற்.கணேஸ்வரன் (நல்லூர்), எஸ். சந்திரிக்கா (புலோலி), எஸ்.ஜெனா (ஆனைக்கோட்டை), பி. பாலினி (அல்வாய்), என்.கல்யாணி (சாவகச்சேரி), என்.யோககுருநாதன் (கொக்குவில்), யு.சந்திரபோஸ் (கொக்குவில்), ரி.ராஜசிங்கம் (யாழ்ப்பாணம்), எஸ்.தங்கராஜா (யாழ்ப்பாணம்), எஸ்.வினோதன் (கொழும்பு), ரி.காயத்திரி (புலோலி), கே.விசாலட்சி (சுழிபுரம்), பி.வானதி (கொக்குவில்), எச்.நாகரட்ணம் (கிளிநொச்சி), என்.தனபாலசிங்கம் (யோகபுரம்), எல்.நித்தியானந்தம் (கிளிநொச்சி), ஆர்.காயத்திரி (கொழும்பு)

**பௌதீக விஞ்ஞானம்**

பி.முரளீதரன் (பருத்தித்துறை), ஐ.வினோதன் (கொடிகாமம்), எவ்.சந்துரு (பண்டத்தரிப்பு), எஸ்.புவியரசி (மல்லாகம்), ஆர்.சஞ்சீவன் (கரவெட்டி), எஸ்ரகுரட்ணம் (யாழ்ப்பாணம்), கே.கீர்த்தனா (சங்கானை), கே.கிறிஸ்னாநந்தன் (புத்தூர்), ரி. கோபி (சாவகச்சேரி), ஆர்.தேவகி (கரவெட்டி), ரி. கீர்த்தனா (மீசாலை), வி.ஆயகுலன் (வவுனியா), கே.உதயராஜ்கரன் (அரியாலை), எஸ்.மகேஸ்வரன் (முல்லைத்தீவு).

**விவசாயம்**

என்.அகுமத் (புத்தளம்), கே. அருணாசலம் (வல்வெட்டித்துறை), சி.தர்சிகா (கரவெட்டி), பி.ஜனனீ (சுனனாகம்), பி.சுப்பிரமணியம் (கொக்குவில்), என்.நடராஜா (யாழ்ப்பாணம்), ரி.கோகுலன் (சுன்னாகம்),எஸ்.குணசிங்கம் (உரும்பிராய்) கே.துரைசிங்கம் (நீர்வேலி), ரி.சுப்பிரமணியம் (கைதடி), வை.வெள்ளையம்பலம் (வட்டுக்கோட்டை), எஸ்.சசிகலா (சண்டிலிப்பாய்), எஸ்.ரீகன் (மானிப்பாய்), கே.துளசி (நல்லூர்), ஆர்.சசிக்குமார் (பரந்தன்), எம்.அமிர்தகிரணன் (கிளிநொச்சி).

ஆகியோரே பல்கலைக்கழகத்துக்கு புதிததாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பதிவுகள் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் இன்று இந்தியா பயணம்

(கொழும்பு)

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு பிரதமர் மஹிந்தராஜபக்ஷ இன்று இந்தியாவுக்குச் செல்கிறார்.

பிரதமர் தனது விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், நிதியமைச்சர் ப.சிதம்பரம் மற்றும் பிற அமைச்சர்களையும் சந்திக்க இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் கிராமங்களுக்கிடையேயான தொடர்பாடல்களை அதிகரிக்க, கிராமிய வீதிகளைத் திருத்தித் தருமாறு இந்திய அரசாங்கத்தை பிரதமர் ராஜபக்ஷ கோரவுள்ளார் என பிரதமரின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

இந்தியா எமது நாட்டுக் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு உதவுமென பிரதமர் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். பிரதமர் ராஜபக்ஷவுடன் விவசாய அமைச்சர் அநுர திஸநாயக்கவும் ஆகியோரும் செல்லவுள்ளார்.

இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு பிரதமர் ராஜபக்ஷ நாளை மறுதினம் கொழும்பு திரும்புவார். (முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

# இன்னொரு ஹெல உறுமய பிக்கு கண்டியில் வைத்துத் தாக்கப்பட்டார்!

ஜாதிக ஹெல உறுமயவின் கணடி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான உடவத்த நந்தா தேரர் மதுபோதையில் இருந்த ஒருவரால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

நாடாளுமன்றத்தில் பிக்குகள் மீது அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்டதுபோன்று அதே கீழ்த்தரமான தாக்குதல் பாணியிலேயே மதுபோதையில் இருந்த நபர் தன்னைத் தாக்கியதாக தாக்குதலுக்குள்ளான ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை - பிக்கு மீது தாக்குதல் நடத்தியவரைத் தாம் கைது செய்துள்ளதாகவும் குற்றவாளி பிக்குவிடம் மன்னிப்புக்கோரியதை அடுத்து கடுமையான எச்சரிக்கையுடன் அவர் விடுதலை செய்யப்பட்டதாகவும் கண்டி பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

# போர்நிறுத்த மீறல்களில் இரு தரப்பும் ஈடுபட்டுள்ளன!

## கண்காணிப்புக்குழு பேச்சாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

போர்நிறுத்தத்தை இருதரப்பினருமே மீறிவருவதாகக் கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் டில்சாசின்பாகோ கடந்த புதன்கிழமை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

இரு பகுதியினருப இதுவரை யுத்தநிறுத்த மீறல்களில் பாரியளவில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் இரு பகுதியினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் இதுவரை நிகழ்ந்த அரசியற்கொலைகள் மற்றும் கொழும்பில் இடம்பெற்ற தாக்குதலுடன் இந்த நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான நிகழ்வுகளில் இறுதித் தீர்மானம் எடுக்கும் தன்மை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு இருக்க வேண்டுமெனவும், கண்காணிப்புக் குழு இரு தரப்பினருக்கும் இதனை வலியுறுத்தி உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# புலிகளுடனான பேச்சுக்குறித்து மக்கள் கருத்தறியவேண்டுமாம்!

## - ஜே.வி.பி கூறுகிறது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஆரம்பிக்கப்படும் சமாதானப் பேச்சுவார்த்தை இறுதித் தீர்வை அடிப்படையாகக் கொண்டதா அன்றேல், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாகக் கொணடதா என்பது தொடர்பாக இலங்கை மக்களின் விருப்பத்தை அறிந்து கொள்ளவேண்டும் என்ற கொள்கையே ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிலைப்பாடு என்று ஜே.வி.பி. தெரிவிக்கிறது.

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளுடனும் இந்தவிடயங்கள் குறித்து வெவ்வேறாக கலந்துரையாடத் தீர்மானித்தமைக்கும், இந்த நிலைப்பாடே காரணம் என்று கட்சியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக் கொண்ட விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது பொதுவாக இலங்கைக்குள் வாழும் சகல இன மக்கள்மீதும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடு.

இதனால், குறிப்பிட்ட கால எல்லைக்குள் இறுதித் தீர்வு எட்டுவது குறித்து, பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்று அரசாங்கம் ஆலோசனை தெரிவித்திருநதது.

இந்தக் கொள்கை ரீதியான உடன்பாடு இன்மையே இரு தரப்பினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்குத் தாமதத்தை தோற்றுவித்திருக்கிறது என்றும் ரில்வின் சில்வா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# இடைக்கால நிர்வாகம் வழங்கும் வரை இலங்கைக்கு உதவி வழங்கக்கூடாது!

## அந்நாட்டு தூதரக அதிகாரியிடம் யாழ்.பொது அமைப்புக்கள் கோரிக்கை

விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகசபையை வழங்கும் வரை இலங்கைக்கு எந்த உதவிகளையும் அமெரிக்கா வழங்கக் கூடாது.

இவ்வாறு யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் அரசியற் பிரிவு துணைச் செயலர் கோடி சி. டெய்லர் அம்மையாரிடம் கோரிக்கை விடுததுள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் வந்த அமெரிக்கத் தூதரக அதிகாரியிடம் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கையளித்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காகப் போராடி உயிர்த் தியாகம் செய்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக கருதி அமெரிக்கா தடை செய்துள்ளமை குறித்து தமிழ் மக்கள் மிகவும் கவலையடைந்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஒருபோதும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவதில்லை. தமிழ் மக்களின் அரசியல், சமூக பொருண்மிய அபிலாசைகளை வென்றெடுக்கவே அவர்கள் போராடி வருகிறார்கள் என்பதனை இன்று சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

இலங்கை அரசும் இதனை ஏற்றுக்கொண்டே தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்தியது.

முன்னைய அரசு விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தைகளை நடத்திய அடிப்படையில் விடுதலைப புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அவர்களுக்கு வழங்குவதன் மூலம்தான் நிரந்தர சமாதானம், அமைதி ஏற்பட வழி பிறக்கும் என்பதை உறுதிபடத் தெரிவிக்கின்றோம்.

கடந்த காலங்களில் வெளிநாடுகளில் பெற்ற நிதியுதவிகளை -தமிழ் மக்களைக் கொன்றொழிக்கவும், தமிழரது நிலங்களை ஆக்கிரமிக்கவும், சொத்துக்களை அழிக்கவுமே அரசாங்கம் பயன்படுத்தியது.

ஆதலால், தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வழங்கப்படும் வரை அமெரிக்கா எந்தவகையான நிதியுதவிகளையும் இலங்கை அரசுக்கு வழங்கக்கூடாது.

தமிழ்த் தேசிய இனம் சுயநிர்ணய உரிமையோடு வாழ, அமெரிக்கா உதவ வேண்டுமென கேட்டுக் கொண்ட யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் - தமிழ் மக்களின் பேரில் பின்வரும் நான்கு கோரிக்கைகளையும் முன்வைத்தது.

தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்,

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத பட்டியலிலிருந்து நீக்குதல்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை வழங்கும்படியான அழுத்தத்தை அரசுக்கு கொடுத்தல்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வழங்கப்படும் வரை எந்தவித நிதியுதவிகளையும் வழங்காது நிறுத்தி வைத்தல்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்திறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை - சர்வதேச மாணவர் பேரவை, யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம். யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம், யாழ். மாவட்ட இடம் பெயர்ந்தோர் நலன்புரி நி[illegible]பங்களின் சமாசம் ஆகியனவு[illegible]கடிதம் அனுப்பிவைத்துள்ளன.

### விரைவில்....

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சியில் அரசு தீவிரமாக ஈடுபட்டது.

கருணா விவகாரத்துடன் அரசாங்கத்துக்கு எந்தவிதமான தொடர்புகளும் இல்லை.

லண்டனிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துவரும் கருத்துக்களும் வரவேற்கப்படவேண்டியவை எனவும் லக்ஸ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.

# பொதுமக்களுடனான மோதலில் ஒரு பொலிஸார் பலி; 8 பேர் காயம்!

(கொழும்பு)

காலி - கொஸ்கொட பகுதியில் நேற்று பொதுமக்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் பொலிஸ்காரர் ஒருவர் உயிரிழந்தார். இப்பிரதேசத்தில் ஏற்பட்ட விபத்து ஒன்று தொடர்பாக உரிய விசாரணை மேற்கொள்ளவில்லை என்பதை கண்டித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் ஒன்றின் போதே இரு தரப்புக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

வாகனம் ஒன்றில் மோதுண்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை பொலிஸார் எவ்வித விசாரணைகளும் இன்றி விடுவித்தமையை ஆட்சேபித்து பொதுமக்கள் கொஸ்கொட பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இதன்போது, ஏற்பட்ட மோதலின் போது பொலிஸார் ஒருவர் கொல்லப்பட்ட அதேநேரம் மேலும் எட்டு பொலிஸார் காயமடைந்தனர். (01)

# மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக செயலகத்தில் கலந்துரையாடல்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி குறித்த முக்கிய கலந்துரையாடல் ஒன்றை, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று யாழ். செயலகத்தில் நடத்தினர்.

யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக்காலை 11 மணியளவில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்துக்குத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராசா தலைமை தாங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.ரவிராஜ், எஸ்.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், க.சிவனேசன், சிவாஜிலிங்கம், ம.க.ஈழவேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் அரச திணைக்கள அதிகாரிகள் தமது திணைக்கத்தில் நிலவும் குறைபாடுகள் பற்றித் தெரிவித்தனர். அத்தோடு அரச அதிகாரிகளும் தமது வேண்டுகோள்களை முன்வைத்தனர்.

அவற்றுக்குத் தீர்வுகாண தாம் சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்கப்போவதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியளித்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

### இலங்கையை...

கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

கருணா விவகாரத்தை அரசு தனக்கு சாதகமாகப் பயன்படுத்த முயல்வதானது, தமிழ்மக்களுக்கும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கும் துரோகமிழைக்கும் செயலாகும்.

ஜனாதிபதி சந்திரிகாவும், இராணுவ புலனாய்வுத்துறையினரும் புரியும் அத்துமீறிய செயல்களை அமெரிக்கா கண்டிப்பதோடு, சமாதான முயற்சிகளுக்கு துணை புரியவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

இந்தச் சந்திப்பில், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா என். ரவிராஜ், எஸ்.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், க.சிவனேசன், சிவாஜிலிங்கம், ம.க.ஈழவேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அமெரிக்க தூதரக அதிகாரி கோடிசி ரெயிலர் நேற்று யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம், அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றுக்குச் சென்று அங்குள்ள பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

### சச்சு மாஸ்டரின்...

தும் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

இதேவேளை - இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகவும் - குறிப்பிட்ட துப்பாக்கி எவ்வாறு சிறைச்சாலைக்குள் வந்தது என்பது தொடர்பாகவும் 15ற்கும் மேற்பட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் வாக்குமூலங்கள் பொலிஸாரால் பெறப்பட்டுள்ளன.

உறுதிப்படுத்தப்படாத தகவல் ஒன்றின்படி துப்பாக்கிச் சூட்டை நடத்தியவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் கைத்துப்பாக்கி மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் என்பன இராணுவ உளவுப்பிரிவினரால் கருணாவின் ஊடகப் பேச்சாளராக சிறையிலிருந்து செயற்பட்ட மாறன் எனப்படும் சச்சு மாஸ்டருக்கு வழங்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.